பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Registered as a NewsPaper


விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12


நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | ஆனி -09 | 23-06-2005 | வியாழக்கிழமை | ஓசை 125



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
முல்லைச்சாலை, தருமபுரம்.
T.P:0712-610008
(சி-12122)
விநாயகர் வீதி. மயிலிட்டி.

# சனாதிபதியின் வாக்குறுதிகளை மட்டுமே ஹெல்கேசன் எடுத்து வந்திருந்தார்!

## பொதுக்கட்டமைப்பு கைச்சாத்து குறித்து எதுவும் இல்லை எனத் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



**இன்றைய சந்திப்பில் பெரிதாக மாற்றங்கள் ஏதும் ஏற்பட்டதாக இல்லை. வழமைபோலவே சனாதிபதியினுடைய வாக்குறுதிகளை மட்டும் எடுத்து வந்திருந்தார்களே தவிர நடவடிக்கைகள் எதையும் முன்னெடுக்கின்ற சந்திப்பாக இது அமையவில்லை. இதேவேளை நாங்கள் இந்தச் சந்திப்பின்பொழுது இங்கேஉள்ள களநிலவரம் பற்றி அனுசரணையாளர் என்ற வகையில் அவர்களுக்கு தெளிவாக்கியிருக்கின்றோம் இவ்வாறு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் கூறியுள்ளார்.**

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார்ஹெல்கேசன் மற்றும் நோர்வேத்தூதுவர் கான்ஸ்பிரஸ்கர் ஆகியோரை சந்தித்துப் பேச்சுக்களை நடாத்திய பின் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் இச்சந்திப்பு தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்:

இன்று நோர்வே பிரதிவெளி

(02 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு கைச்சாத்தாகும் கால எல்லையை கூறமுடியாது

### - கிளிநொச்சியில் விதார் ஹெல்கேசன்

பொதுக்கட்டமைப்பு எப்பொழுது கைச்சாத்தாகும் என்பதற்கான எந்தவொரு கால எல்லையையும் கூறமுடியாது உண்மையிலேயே நிலைமையில் முன்னேற்றம் உள்ளது ஆனால் கூடுதலான மக்கள் இதனைத்தவறுதலாகப் புரிந்துள்ளனர் என நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் கூறுகையில், அரசியல் துறைப்பொறுப்பாளருடனான சந்திப்பையடுத்து வியாழக்கிழமை (இன்று) கொழும்பில் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளோம். இது பற்றிய முடிவுகளை வெளியிடுவோம்.

இருதரப்பினர் இடையேயும் சில நம்பிக்கையற்ற தன்மைகள் நிலவுகின்றன. நான் சில நல்ல செய்திகளை கொழும்புக்குக்கொண்டு செல்கி

(12ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சி வரிசையில் ஜே.வி.பி அமர்வு!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பிரதான பங்காளியான ஜே.வி.பி கூட்டமைப்பு அரசாங்கத்திலிருந்து விலகிய பின்னர் பாராளுமன்றம் முதல் தடவையாக நேற்றுக்கூடியுள்ளது. பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவாக இதுவரை 119 உறுப்பினர்களும், சபாநாயகரைத் தவிர்த்து எதிர்கட்சியில் 105 உறுப்பினர்களும் அங்கம் வகித்தனர்.

இந்த நிலையில் மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த 39 பாராளுமன்ற உறுப்பினர்களும் தற்பொழுது அரசாங்கத்தை விட்டு வெளியேறியுள்ளமையினால் அரசாங்கத்தில் தற்பொழுது 82 பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஹர்த்தாலைக்குழப்ப முயற்சி வன்முறையில் 3 சிங்களக் காடையர் காயம்!

### - அச்சத்தால் தமிழ்மக்கள் வெளியேற்றம்

(திருமலை)

திருமலை மாவட்டம் மூதூரிலிருந்து 20 கிலோமீற்றர் தொலைவிலுள்ள மேன்காமம் பகுதியில் ஹர்த்தால் ஒன்றினைத் தமிழ்மக்கள் கடைப்பிடித்தவேளை அதனைக் குழப்புவதற்கு சிங்களக்காடையர்கள் மேற்கொண்ட முயற்சியால் அங்கு வன்முறை மூண்டுள்ளது. இதனால் மூன்று சிங்களக் காடையர்கள் காயமடைந்தனர். இதனையடுத்து அப்பகுதியில் ஊரடங்கு உத்தரவு பொலிசாரால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் சேருநுவர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கலவர வேளையில் அங்கு வந்த பொலிசார் எச்சரிக்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் புலனாய்வாளர் தாக்குதலில் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று பொலிஸ் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் இனந்தெரியாதோரின் தாக்குதலில் படுகாயமடைந்தார்.மட்டக்களப்பு வைத்தியசாலை வீதியிலுள்ள தண்ணீர் தாங்கியடியில் வைத்து நேற்று மதியம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திட்டால் ஆளும் கட்சியை பலமிழக்கச் செய்வோம்

### - பாராளுமன்றில் விமல் வீரவன்ச எச்சரிக்கை

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் சனாதிபதி கையெழுத்திட்டால் ஆளும் கட்சியின் பலத்தை இழக்கச் செய்வது தொடர்பில் ஜே.வி.பி நடவடிக்கை எடுக்குமென அக்கட்சியின் பாராளுமன்ற குழுத்தலைவர் விமல் வீரவன்ச சிறிலங்கா பாராளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்தை விட்டு விலகியதன் பின் பாராளுமன்றம் நேற்று முதல் முறையாகக்கூடியது. சபை நடவடிக்கைகள் ஆரம்பித்த உடன் விசேட அறிக்கை ஒன்றை ஜே. வி. பி பாராளுமன்றக் குழுவின் தலைவர் விடுத்தார். தாம் அரசாங்கத்துக்கு வழங்கி வந்த ஆதரவை விலக்கி கொள்வதாக தெரிவித்ததுடன் பொதுக்கட்ட


(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறுபான்மையினர் மீதான வன்முறைகள்அதிகரிக்கின்றன

### -சிறிலங்கா மீது ச.தே.ம.சபை கண்டனம்

சிறிலங்காவில் சிறுபான்மையின மக்கள் மீதான வன்முறைகள் அதிகரித்து வருவதாக சர்வதேச மன்னிப்புசபை சிறிலங்கா அரசிற்கு கண்டனம் தெரிவித்துள்ளது. 2004 ஆம் ஆண்டு சனவரி முதல் டிசெம்பர் மாத காலப்பகுதி தொடர்பான தமது அறிக்கையை சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)



## தேசிய ரீதியில் வெற்றிபெற்ற வீரர்களுக்கு அரசியல்துறைப்பொறுப்பாளரால் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் தேசிய ரீதியில் வெற்றிபெற்ற வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று அரசியல் துறை நடுவப்பணியகத்தில் நடைபெற்றது.

நேற்று நண்பகல் 11.30 மணிக்கு நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்துகொண்டு விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடியதுடன், அவர்களுக்கான நினைவுப் பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட கராத்தே சம்மேளனத் தலைவர் கேந்திரமூர்த்தி, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன், அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், அம்பாறை மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் ரதன், தமிழீழ கராத்தே சம்மேளனத் தலைவர் இரட்ணசோதி மாஸ்ரர் ஆகியோர் கலந்து கொண்டனர்.(சோ)

# வரிவிளம்பரம்


## மணமகள் தேவை

இந்து குடும்பத்தைச் சேர்ந்த தனியார் நிறுவனமொன்றில் பணிபுரியும் 1973 இல் பிறந்த விசாக நட்சத்திரம் 02ஆம் பாதம் உள்ள விவாகரத்துப்பெற்ற மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். முகவரி:- க.சிவானந்தம் க.திருநாவுக்கரசு (சோதிடர்)துர்க்கா வீதி.04ஆம் வட்டாரம். புதுக்குடியிருப்பு.(சி.12255)

## சான்றிதழ் வழங்கல்

எதிர்வரும் 26-06-2005 அன்று மாலை மூன்று மணிக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. எனவே 26-06-2005 இற்கு முன்னர் தங்கள் விபரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.NITM கணனிப்பயிற்சி நிலையம், புதுக்குடியிருப்பு. (6173)

## தவறிவிட்டது

22.06.2005 அன்று மரிசலீன் திலீபன் என்பவரது தேசிய அடையாள அட்டையும் **(771713262V),** அவரது வாகன அனுமதி அட்டையுடன், ஒரு தொகைப்பணமும் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் நெக்டெக், ஆனந்தபுரம், யாழ்.சாலை, கிளிநொச்சி. (6293)

## காணவில்லை

20.06.2005 அன்று புளியங்குளம் சோதனைச்சாவடியில் N.P.HY.6316 இலக்கமுடைய புத்தகம், தற்காலி கபுத்தகம், வரி அட்டை அடங்கிய பாசலை யாராவது தவறுதலாக எடுத்துச் சென்றிருந்தால் தயவு செய்து ஈழநாதம் யாழ். பணிமனை அல்லது கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைப்பவர்க்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தகவல்:- விவேகானந்தராசா துசியந்தன் 22 இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். T.P.0777286061. (5382)

## தவறிவிட்டது

17 ஆம் திகதி அன்று கிளிநொச்சிக்கும் புதுக்குடியிருப்புக்கும் இடையில் கையடக்கத் தொலைபேசி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. இதை கண்டுடெடுத்தவர்கள் லிமற் கணினி கிளிநொச்சி அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (6174)

## 10 நிமிடத்தில் படங்கள்!!!

பாஸ் மற்றும் சகல அடையாள அட்டைப்படங்கள் உடனுக்குடன் வழங்குகின்றோம். அவசர தேவைக்காக டிஜிற்றல் அல்பம் 24மணி நேரத்தில் செய்து வழங்குகின்றோம்.

யாழ். ஒளி K.K.R. Photos இல.05கனகபுரம்தெரு, கிளிநொசசி (6294)

## ஆங்கில முன்பள்ளி– முள்ளியவளை

முள்ளியவளைப் பிரதேசத்தில் ஆங்கிலமொழியிலான முன்பள்ளி ஒன்று யூலை மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. மூன்று வயதிற்கும் ஐந்து வயதிற்கும் இடைப்பட்ட குழந்தைகள் இப் பள்ளியில் ஆங்கிலமொழி மூலம் கற்பிக்கப்படவுள்ளனர். எனவே தங்கள் குழந்தைகளை இப் பள்ளியில் சேர்க்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை அமைப்புக்குழு செயலாளர் ம.கமல காந்தன் மு/கொக்குதொடுவாய் அ.த.க பாடசாலையில் பெற்றுப் பூர்த்தி செய்து 25.06.2005 இன் முன் அவரிடமே திருப்பி ஒப்படைக்கவும்.

தகவல்:- அ.கா. மகாலிங்கம். தலைவர் அமைப்புக்குழு (சி.12258)

## நன்றி கூறுகின்றோம்

**கடல் பேரலை அனர்த்தத்தினால் தொழில் இழந்த எமது அங்கத்தவர்களுக்கு 09. 06. 2005 அன்று தொழில் உபகரணங்கள் வழங்கிய முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர்/ பணியாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியையும், பாராட்டையும் தெரிவிப்பதோடு தங்களின் தேசப்பணி தொடர எமது வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம் இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியை தெரிவிக்கிறோம்.**

**முல்லை மாவட்ட அழகக சங்கங்களின் சமாசமும், முள்ளியவளைப்பிரதேச அழகக சங்கமும்.** (சி.12257)


# கூட்டுறவு உத்தியோத்தர்களுக்கு திருமலையில் நேர்முகப்பரீட்சை

வடக்குகிழக்கு மாகாண கூட்டுறவுத்திணைக்கள மாவட்ட உத்தியோகஸ்தர்களுக்கான நேர்முகப்பரீட்சை இன்றும், நாளையும் பொதுச்சபை ஆணைக்குழு, திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நேர்முகப்பரீட்சைக்கு கிளி, முல்லை மாவட்டங்களிலிருந்து ஐந்து பேர் மாவட்ட உத்தியோகஸ்தர்களாக சமுகமளிக்கவுள்ளனர்.

கடந்த பத்து வருடங்களுக்குப் பின்பு கூட்டுறவுத்திணைக்கள மாவட்ட உத்தியோகஸ்தர்களுக்கான பரீட்சை தற்போது நடைபெறவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# உலகஅகதிகள் தினத்தில் மாணவர்களுக்கு உதவி

மன்னாரில் கடந்த சனிக்கிழமை உலகஅகதிகள் தினம் கொண்டாடப்பட்டுள்ளது. இதனை ஜே.ஆர்.எஸ் எனப்படும் யேசுசபை அகதிகள் பணியகம் முன்னின்று நடத்தியுள்ளது.

இதன்போது மன்னார் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் இடம்பெயர்ந்து கல்விகற்கும் 550 மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வை மேற்படி நிலையத்தின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.மார்ட்டின் டயஸ் தலைமையேற்று நடத்தினார். (18)

# சனாதிபதியின்...

விவகார அமைச்சர் தலைமையிலான நோர்வே தூதுக்குழுவினரோடு நாங்கள் கலந்துரையாடியிருக்கிறோம்.

**இந்தப் பெதுக்கட்டமைப்பு விடயத்தில் சனாதிபதியின் நிலைப்பாடு இப்பொழுது எப்படியிருக்கிறது?**

சனாதிபதியின் வாக்குறுதி மட்டும்தான் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றதே தவிர ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை பொதுக்கட்டமைப்பை நிறைவேற்றி அதிகாரம் கொண்ட சனாதிபதி என்ற வகையில். உடனடியாக முடிவெடுத்து அதை நடைமுறையில் கொண்டுவருவது ஒரு பிரச்சினை அல்ல. அதை இன்று பாரிய பிரச்சனையாக்கி ஒரு அரசியல் காய்நகர்த்தலுக்கு அதைத்தள்ளி தங்களுடைய அரசியல் எதிர்காலத்திற்கு இதைப் பயன்படுத்துகின்ற போக்குத்தான் தெற்கிலே ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதைத்தான் இன்று சனாதிபதி செய்துகொண்டிருக்கின்றார். இன்று இதற்கு எதிரான ஒரு உணர்வை உருவாக்குவதற்கு இந்த இழுத்தடிப்பே காரணம். ஆகவே இந்த இழுத்தடிப்பு நிலையை சனாதிபதி முடிவுக்குக் கொண்டுவருவதுபற்றி நாங்கள் ஏற்கனவே பல தடவைகள் வலியுறுத்தியிருக்கின்றோம். இந்தத் தடவை சந்திப்பின்பொழுதும் சனாதிபதி வாக்குறுதியை மட்டும்தான் வழங்கியிருகிறாரே தவிர வழமையான ஒரு இழுத்தடிப்புப் போக்கையே தொடர்ந்தும் மேற்கௌ்வதாகவே தெரிகிறது.

**நோர்வேத்தரப்பினர் இன்று அரசாங்கத்திடமிருந்து ஏதேனும் செய்தியை எடுத்து வந்தார்களா?**

வழமையான சந்திப்புப்போலவே இன்றும் நடைபெற்றது. சனாதிபதியை நேற்று சந்தித்திருக்கின்றார்கள். வழமைபோலவே சனாதிபதி கொடுக்கின்ற வாக்குறுதியை இன்றும் எடுத்து வந்து செல்லியிருக்கிறார்கள் அதாவது பொதுக்கட்டமைப்பில் விரைவில் சனாதிபதி கைச்சாத்திடுவார் என்றும், விரைவில் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்றும் தமக்கு வாக்குறுதியளித்துள்ளார் என்று மட்டும் கூறினார்கள். ஆகவே நாங்கள் இதில் முழு அளவில் நம்பிக்கை கொள்ளமுடியாது ஏனெனில் இந்தப் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்பட்டு நடைமுறைக்கு வருவதற்கூடாகத்தான் எங்கள் மக்களோ, நாங்களோ நம்பிக்கையடையக் கூடியாதாகவிருக்கும். ஆகவே வாக்குறுதிகளை மட்டும் நம்பிக்கொண்டு நாங்கள் எந்த முடிவுகளையும் எடுக்கமுடியாது இக்கட்டுக்குள் இருக்கின்றோம். கடந்த கால அனுபவமும் இதுவே என்பதை நாங்கள் அவர்களுக்கு சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

**பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம்கள் தரப்பில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் பற்றி விதார் ஹெல்கேசன் தகவல் ஏதும் தெரிவித்தாரா?**

ஆரம்பத்தில் இருந்தே இந்தப் பொதுக்கட்டமைப்னபக் கொண்டுவரும் பொழுது நாங்கள் முஸ்லிம் தரப்பினுடைய பிரதிநிதித்துவம் சம்பந்தமாக உறுதியாக வலியுறுத்தியிருந்தோம். இந்தப் பொதுக்கட்டமைப்புக்குள்ளும் அது கொண்டு வரப்பட வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்தி வந்துள்ளோம். இன்றும் அதை வலியுறுத்தியிருக்கின்றோம். ஆகவே முஸ்லிம் தரப்பின் மத்தியிலேயும். எல்லாத்தரப்பின் மத்தியிலும் ஒருகுழப்பத்தை ஏற்படுத்துகின்ற ஒரு போக்கைத்தான் சனாதிபதி கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்றார். இதை ஒரு சர்ச்சைக்குள்ளான விடயமாக்கி வருவதோடு உண்மையிலேயே இதன் உள்ளடக்கங்களை சரியாக விளங்கப்படுத்தி அதற்கான ஆதரவைத் திரட்டுவதைத் தவிர்த்து நிலைமைகளை சீரழிக்கின்ற ஒரு நிலையிலேதான் தெற்கிலே சனாதிபதியிடைய செயற்பாடு அமைந்திருக்கின்றது. முஸ்லிம் தரப்போடு நாங்களும் இன்று பேசமுடியாதவர்களாக இருக்கின்றோம். எனெனில் சனாதிபதியினுடைய வாக்குறுதிகளை மட்டும் நம்பிக்கொண்டு முஸ்லிம் மக்களுக்கு நாங்கள் எந்த வாக்குறுதிகளையும் கொடுக்க முடியாதிருக்கின்றோம்.

**பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் தரப்பு பிரதிநிதித்துவம் பெறுவது பற்றி உங்களுடைய நிலைப்பாடு என்ன?**

இந்தப் பொதுக்கட்டமைப்பில் இரண்டு தரப்பும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்த நிலையில் இந்தப் பொதுக்கட்டமைப்பில் உள்ள கட்டமைப்புகளை உருவாக்குகின்ற வேளையில் நிச்சயமாக முஸ்லிம் மக்கள் பாதிப்பினடிப்படையில் அவர்களுடைய பிரதிநிதித்துவம் முழுமையாக இருக்கவேண்டும் என்பதை நாங்கள் ஏற்கனவே வலியுறுத்தியிருக்கின்றோம்.

**பொதுக்கட்டமைப்பின் அமைப்பு தொடர்பான பல விடயங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன. அது சம்பந்தமாக அரசாங்கத்திடமிருந்து உத்தியோக பூர்வமான ஏதேனும் அறிவிப்புக்கள் கிடைத்ததா?**

நிச்சயமாக அந்த அதிருப்தியும் எங்களுடைய மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றதென்பதை நாங்கள் தெளிவாக்கியிருக்கின்றோம். ஏனெனில் இந்தப் பொதுக்கட்டமைப்பு சனாதிபதிக்கோ பாராளுமன்றத்திற்கோ பதில் சொல்வதாக அது இருக்கப்போவதில்லை. அது ஒரு சுதந்திரமான கட்டமைப்பாகவும் இதனுடைய நிதியத்தைக்கையாள்வது ஒரு நிதி நிறுவனத்தின் பொறுப்பின் கீழும் இருக்கும் என்பது ஏற்கனவே எங்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கட்டமைப்பிலும் அது உள்ளடக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் சனாதிபதியவர்கள் அண்மைக்காலத்தில் இது சம்பந்தமாக செய்த விமர்சனம் ஆற்றிய உரை மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றதென்பதை நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். ஆகவே இன்று நோர்வேத்தரப்பிடம் எங்களுடைய கவலையையும். கரிசனையையும் மிக உறுதியாக தெரியப்படுத்தியிருக்கின்றோம்

**இறுதியாக விடுதலைப் புலிகளிடம் நோர்வேத்தரப்பினால் கையளிக்கப்பட்டவரை விடுதலைப்புலிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பின்னர் சனாதிபதியால் அதன் உள்ளடக்கம் மாற்றப்பட்டிருக்கும் எனக்கருதுகிறீர்களா?**

அது பற்றி இன்று நோர்வேத்தரப்பு எங்களோடு எதுவும் பேசவில்லை. ஆனால் சனாதிபதியுடைய உரை செய்திகளில்தான். இது பற்றி தகவல் வருகின்றனவே தவிர நோர்வேத் தரப்பினர் இது பற்றி எதுவும் பேசவில்லை ஆனால் இது பற்றி செய்திகள் வருவதாக குறிப்பிட்டிருந்தோம். ஆனால் அவர்கள் இது பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை.

முக்கியமாக இன்று வலியுறுத்தியது என்னவெனில் பொதுக்கட்டமைப்பிற்கு அப்பால் கள நிலவரங்கள் மிக நெருக்கடியடைந்து கொண்டு வருகின்றதென்பதை சுட்டிக்காட்டியிருக்கிறோம் யுத்த நிறுத்த சூழல் நெருக்கடியாகிக் கொண்டு போகின்றது. இராணுவ நெருக்குவாரங்கள் பொருளாதாரத் தடை, மக்கள் மீதான இராணுவ ஆக்கிரமிப்பு இறுக்கமடைகின்ற சூழ்நிலையில் தொடர்ந்து இந்தச் சமாதான முன்னெடுப்புகளையோ, யுத்த நிறுத்த சூழலையோ நாங்கள் முன்னெடுப்பதென்பது சாத்தியமில்லாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றது. மக்கள் இன்று விரக்தி அடைந்து கொண்டிருக்கின்றார்கள். இன்று மக்கள் போராட்ட முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறார்கள். இந்த நிலையில் தொடர்ந்தும் இந்தச் சமாதானச் சூழலைப் பின்பற்றக் கூடியதாக இருக்குமோ என்பது கேள்விக்குறியாகஇருக்கின்றது. என்பதை நோர்வே தரப்புக்கு மிக இறுக்கமான வலியுறுத்தியிருக்கின்றோம். ஏனெனில் எங்களுடைய மண்ணில், எமது தேசத்தில், எங்கள் மக்கள் மீது ஆக்கிரமிப்பையும், இராணுவ நெருக்குவாரங்களையும், இராணுவத் திணிப்பையும் இன்று அதிகரித்துக்கொண்டு சமாதானத்தைப் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை, எங்களுடைய மக்கள் அதிலிருந்து மீள்வதற்கான வழியைப் பற்றி சிந்திப்பவர்களாக இருக்கின்றார்கள். அதனடிப்படையில் மக்கள் ஒரு முடிவை எடுக்கின்ற சூழல் உருவாகி வருகின்றதென்பதையும் நாங்கள் நோர்வேத்தரப்பிற்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

*** இந்த நெருக்கடி நிலை தீர்வுக்கு ஏதாவது ஆலோசனை கூறியிருக்கின்றீர்களா?**

ஆலோசனை என்பது முதலில் இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது போல மக்கள் குடியிருப்புக்கள், மக்கள் நெருக்கமாக வாழ்கின்ற வாழ்விடங்கள், இவற்றிலிருந்து இராணுவம் விலகி மக்களை மீளக் குடியமர்த்தி அங்கு ஒரு இயல்பு நிலையைக் கொண்டுவந்து இராணுவ நெருக்குவாரங்கள் முற்றாக அகற்றப்பட வேண்டும். இராணுவ நெருக்குவாரங்களுக்கு மத்தியில் சமாதான முன்னெடுப்புக்களோ, அமைதி முயற்சிகளோ, தீர்வுகளோ எதுவுமே சாத்தியமில்லை என்பதை இன்று தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

***வடகிழக்குப் பகுதியில் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் போராளிகள் மீதான தாக்குதல்கள் மற்றும் அரசியல் அலுவலகங்கள் மீதான தாக்குதல்கள் பற்றி என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?**

இன்றும் அதை மிக இறுக்கமாக வலியுறுத்தியிருக்கின்றோம். இராணுவத்தரப்பு ஒரு நிழல் யுத்தத்தை எமது மக்கள்மீது திணித்திருக்கின்றது. எமது அரசியல் செயலகங்கள், எமது போராளிகள் மீதான தாக்குதல்கள், கொலை அச்சுறுத்தல்கள், இவை எல்லாமே இந்த யுத்தநிறுத்தத்தை முற்றாகத் ஸ்தம்பிக்க வைக்கின்ற நடவடிக்கையே என்பதை சுட்டிக்காட்டியுள்ளோம். இவற்றுக்கு உடனடியாகத்தீர்வு காணப்படாவிட்டால் நிலைமைகள் மிக மோசமாகும் என்பதையும் எடுத்து விளக்கியுள்ளோம்.

***ஜே.வி.பி இல்லாமல் இயங்கும் இந்த அரசாங்கத்தைப் பற்றி என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

இப்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியின் கையில்தான் எல்லா முடிவுகளும் தங்கியிருக்கிறது. ஆகவே சனாதிபதிக்கு இடையூறாக ஜே.வி.பி இருந்ததாக அண்மைக் காலத்தில் சொல்லப்பட்டது.

இப்போது ஜே.வி.பி அரசிலிருந்து விலகியிருக்கின்றது. எனவே சனாதிபதி உறுதியாக தீர்க்கமான முடிவுகளை எடுத்து அடுத்தகட்ட நகர்வுளை மேற்கொள்வது ஒரு பிரச்சினையான விடயம் அல்ல ஆனால் மீண்டும் பாராளுமன்றத்திற்கு கொண்டு போவதாகவும் அபிப்பிராயம் கேட்பதாகவும் கூறி பொதுக்கட்டமைப்பு விடயத்தில் தொடர்ந்தும் கால இழுத்தடிப்பைச் செய்கின்ற ஒரு தந்திரோபாயத்தைத் தான் கையாழுவதாகவே எங்களால் உணரமுடிகிறது. (ச.தீ)

# புஷ்சுடன் பேசவும், சமாதானமாகப்போகவும் சதாம் விருப்பம்! சிறையில் அமெரிக்க இராணுவத்தினரிடம் தெரிவித்தாராம்

(நியூயோர்க்)

**அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்சுடன் பேசவும், அவருடன் சமாதானமாகப்போகவும் சதாம் ஹூசைன் விருப்பம் தெரிவித்துள்ளதாக இணையதளம் ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.**

ஈராக்கின் அசைக்க முடியாத ஆட்சியாளராக இருந்த சதாம் ஹூசைனின் அழிவு, 1991ஆம் ஆண்டு குவைத் மீது கை வைத்ததில் இருந்து ஆரம்பமானது. 2003 ஆம் ஆண்டு மார்ச்சில் அவருடைய ஆட்சிக்கு அமெரிக்க-பிரிட்டன் கூட்டுப்படைகள் முடிவு கட்டின. ஈராக்கில் தனது சொந்த ஊரான கிர்குக் அருகே சுரங்க அறையில் பதுங்கியிருந்த அவர், 2003 ஆம் ஆண்டு டிசம்பர் 14ஆம் திகதி பிடிபட்டார். தற்போது, ஈராக்கில் மிகவும் ரகசிய இடத்தில், அமெரிக்க இராணுவத்தால் சிறை வைக்கப்பட்டுள்ளார்.


தனது ஆட்சிக்காலத்தில் ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்ததாக சதாம் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுக்களை விசாரிக்க தனி நீதிமன்று அமைக்கப்பட்டுள்ளது. விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. இரகசிய இடத்தில் சிறை வைக்கப்பட்டுள்ள சதாம், விசாரணைக்கு அழைத்து வரப்படுவது கூடபரம இரகசியமாகச் செய்யப்படுகிறது. அப்படி இருந்தும், சிறையில் உள்ளாடையுடன் சதாம் துணி துவைப்பது போன்று புகைப்படங்கள், பத்திரிகைகளில் சமீபத்தில் வெளியாகின. இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அடுத்தகட்ட பரபரப்பு, அடுத்த மாதம் நடக்கவுள்ளது. சிறையில் ஓராண்டாக சதாமுக்கு காவல் புரிந்த ஐந்து அமெரிக்க இராணுவத்தினர் அவரைப்பற்றி கதையாகக் கூறியிருக்கின்றனர். சிறையில் சதாம் எப்படி இருக்கிறார், என்னென்ன செய்கிறார், யாரைப்பற்றியெல்லாம் உயர்வாக நினைக்கிறார், பெண்களைப்பற்றிய அவருடைய கணிப்பு, அமெரிக்க முன்னாள், அதிபர்கள் எப்படிப்பட்டவர்கள்.. இப்படி, பல்வேறு தகவல்கள் அடங்கிய செய்தியை அமெரிக்க பத்திரிகை ஒன்று வெளியிடவுள்ளது.

சதாமுக்கு காவல் புரிந்த பென்சில்வேனியா தேசியப்படையைச்சேர்ந்த ஐந்து இராணுவத்திற்கும், தற்போது அமெரிக்கா திரும்பி விட்டனர். சதாம் அடைக்கப்பட்டு இருக்கும் இரகசிய இடம், அவரைப் பற்றிய முக்கிய இரகசியத் தகவல் களைத் தவிர, சதாம் தங்களிடம் பேசிய எல்லா விபரங்களையும் அவர்கள் கூறியுள்ளனர். சிறையில் அவர்களிடம் சதாம் கூறிய தகவலில் சில...

கடந்த 1980-89 ஆண்டு ஈராக்கிற்கும், ஈரானுக்கும் இடையே போர் நடந்தது. அப்போது அமெரிக்க அதிபராக றொனால்ட் ரீகன் இருந்தார். போரின்போது அவர் உதவினார். போர் விமானங்கள் உலங்குவானூர்திகள் என்பவற்றை எனக்கு விற்றார். ரீகனும், நானும் நல்ல நண்பர்கள். ரீகன் இப்போதும் உயிருடன் இருப்பதைப் போன்று உணர்கிறேன் அதிபர் ஜோர்ஜ்புஷ்சும் அவருடைய தந்தையும் முன்னாள் அதிபருமான ஜோர்ஜ்புஷ்சும் நல்ல வர்கள் அல்ல முன்னாள் அதிபர் பில்கிளிங்டன் பரவாயில்லை.

அதிபர் புஷ்சுடன் பேசி, சமாதானமாகச் செல்ல விரும்புகிறேன். என்னிடம் பேரழிவு ஆயுதங்கள் எதுவும் கிடையாது என்று



புஷ்சுக்கு தெரியும் அவற்றை வைத்துக் கொள்ள மாட்டேன் என்பதும் அவருக்குத் தெரியும். ஒசாமாபின்லேடனுடன் ஒரு போதும் நான் பேசியது கிடையாது. எல்லா பிரச்சினையும் முடிந்ததும் என் அரண்மனைக்கு வாருங்கள். ஈராக் எவ்வளவுஅழகானது என்று பாருங்கள்.

நல்ல பெண்ணாக பார்த்து திருமணம் செய்யுங்கள்மிகவும் அழகாகவும் இருக்கக் கூடாது: அசிங்கமாகவும் இருக்கக் கூடாது மிகவும் இளைய வயதாகவும் இருக்கக் கூடாது: மிகவும் வயதானவராகவும் இருக்கக் கூடாது. பெண்களிடம் வளைந்து போகக் கூடாது. அப்போது தான் பெண்களை நம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும் என்றெல்லாம் சதாம் சொன்னதாக அமெரிக்க இராணுவத்தினர் கூறியுள்ளனர்.



ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப்படைகள் விலக்கிக் கொள்ளப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியிருக்கும் நிலையில் அமெரிக்க லெப்ரினன்ட் ஜெனரல் ஜோன் லைன்ஸ்.(தற்போதைக்கு ஈராக்கிலிருந்து அமெரிக்க இராணுவம் வெளியேறாது என புஸ் தெரிவித்துள்ளார்.)

## இஸ்ரேலில் ரயில் விபத்து 5 பேர் பலி; 100 பேர் காயம்

(ஜெருசலேம்)

தெற்கு இஸ்ரேலில் உள்ள கிரியத் காட் பகுதியில் சென்று கொண்டிருந்த ரயில் பாரவூர்தி மீது மோதி விபத்திற்குள்ளானதில் ஐந்து பேர் பலியானார்கள்.

15 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் உயிருக்குப் போராடி வருகின்றனர். மேலும் 100 பேர் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.



இஸ்தான்பூலில் நிலவும் கடும் வெப்பம் காரணமாககடந்ததினங்களில் 40 பேருக்கு மேல்பலியாகியதையடுத்து சூட்டைத்தணிக்கநீராடும் பாகிஸ் தானியர்கள்.

## வாஸ்து சாஸ்திரப்படி அமெரிக்காவில் 360 கோடியில் பிரமாண்ட கட்டடம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் வாஸ்து சாஸ்திர முறைப்படி இந்திய ரூ.360 கோடி செலவில் பிரமாண்டமான கட்டடம் ஒன்று கட்டப்படுகிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல ரியல் எஸ்டேட் மற்றும் கட்டுமான தொழில் அதிபர்களில் ஒருவர் ஜெப்ரி எஸ்.அப்ராம்சன் அவர் முழுக்க முழுக்க வாஸ்துசாஸ்திர முறையில் உலகின் மிகப்பெரிய கட்டடம் கட்டத் திட்டமிட்டிருக்கிறார்.

ராக்வில்லி மேரிலேண்ட் பகுதியில் ரூ.360 கோடி செலவில் இந்தப் பிரமாண்ட அலுவலவளாகக் கட்டடம் அமைய இருக்கிறது. இந்திய ஆன்மீக குருவான மகரிஷிமகேஷ்யோகியின் வேத சாஸ்திரக்கலையின் அடிப்படையில் இந்தப் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படுகிறது. இரண்டு இலட்சம் அடி பரப்பளவில் மிக நவீன முறையில் சுற்றுச்சூழல் நிபந்தனைக்கு உட்பட்டு கட்டப்படுகிறது. கட்டடத்தின் உள் பகுதியில் உள்ள காற்று மறு சுழற்சிமுறையில் 55 நிமிடங்களுக்கு ஒரு முறை சுத்திகரிக்கப்படும் என்று ஜெட்ரி அப்ராம்சன் கூறினார்.



ஐரோப்பிய ஒன்றிய தலைமையகமான புருசல்சில் நடைபெறும் சர்வதேச மாநாடொன்றில் ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுக் கொள்கையதிகாரி ஜாவியர் சொலனா கூறுவதை அவதானிக்கும் ஐ.நா. செயலர் கொபிஅனான்.

## ரஷ்ய ரொக்கெட் ஏவிய சிறிதுநேரத்தில் வீழ்ந்து நொருங்கியது

(மொஸ்கோ)


இராணுவ தகவல் தொடர்புக்காக செயற்கைக் கோளுடன் கூடிய ரொக்கெட்டை ரஷ்யா நேற்று ஏவியது. ஆனால் அந்த ரொக்கெட் ஏவப்பட்ட சிறிது நேரத்திலேயே வெடித்துச் சிதறியது.

மேற்கு சைபீரியாவில் விழுந்த. இந்த ரொக்கெட் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியானதால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

ரொக்கெட்டை இயக்கக்கூடிய இயந்திரம் சரியாக செயற்படாததால், இந்தச் சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது. நொருங்கிய ரொக்கெட்டின் பாகங்களை இராணுவத்தினர் தேடி வருகின்றனர்.




சோல்ட்லேக் சிற்றியில் நடைபெற்ற சிறுவர்சாரணர் பாசறையின்போதுகாணாமல் போய்போய்நான்கு நாட்களின்பின் மீட்கப்பட்ட தனது மகனானபிரனனைக் முத்தமிடும் அவரது தாய் ரொபிஹவ்கின்ஸ்.



இஸ்ரேலிய-பலஸ்தீன பிரச்சினைகளுக்கு இராஜதந்திர ரீதியாக தீர்வுகாணப்பட வேண்டும் என்ற நோக்கில் இஸ்ரேலின் பிரதமர் ஏரியல் ஷரோணும். பலஸ்தீன அதிபர் மக்மூத் அப்பாசும் நேற்று முன்தினம் ஜெருச லேத்தில்சந்தித்து பேச்சு நடத்தியபோது.

## சீனக்கடல் பகுதிக்கு தாய்வான் போர்க்கப்பல் விரைவு ஜப்பான் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துமா?

(தைபே)



சீனக்கடல் பகுதியை அடுத்துள்ள யூதாப் கடல் பகுதி யாருக்கு என்பதில் சீனா, ஜப்பான்,தாய்வான் ஆகிய நாடுகளுக்கு இடையே தகராறு நீடித்து வரும் நிலையில் தாய்வான் போர்க்கப்பல் ஒன்று சீனக்கடல் பகுதிக்கு விரைந்துள்ளது.

இந்தப் பகுதியில் மீன் பிடிப்பது தொடர்பாகவும், மூன்று நாடுகளைச் சேர்ந்த மீனவர்களுக்கிடையே சர்ச்சை நிலவி வருகிறது.

இந்தநிலையில் சமீபகாலமாக தாய்வான் நாட்டு மீனவர்களை ஜப்பான் கடற்படையினர் துன்புறுத்துவதாகவும், அவர்களது படகுகளையும், மீன்களையும் பறிமுதல் செய்து விட்டு அவர்களை அடித்து உதைத்து அனுப்புவதாகவும் புகார்கள் எழுந்தன.

தொடர்ந்து தாய்வான் மீனவர்கள் தங்கள் நாட்டு அரசிடம் இது தொடர்பாக புகார் கூறி வந்தனர். இதனால் சர்ச்சைக்குரிய அந்த கடல் பகுதிக்கு தாய்வான் தனது இரண்டு போர்க் கப்பல்களை அனுப்பி வைத்துள்ளது.இந்த போர்க்கப்பல்களில் நீண்டதூரம் பறந்து சென்று கப்பல்களைத் தாக்கும் ஏவுகணைகளும் பொருத்தப்பட்டுள்ளன. தங்கள் நாட்டு மீனவர்களை தாக்கிய ஜப்பான் கடலோர பாதுகாப்புப் படகுகளையும், கப்பல்களையும் தாய்வான் தாக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

அந்தப் பகுதியில் இது பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது.அந்த பகுதிக்கு ஜப்பான் இதுவரை தனது போர்க்கப்பலையோ, விமானங்களையோ அனுப்பி வைக்கவில்லை என்றாலும் தாய்வானின் இந்த நடவடிக்கை ஜப்பான்-தாய்வான் இடையேயான உறவைப் பாதிக்கலாம் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# இனவாதிகளின் அராஜகத் தாக்குதல்களுக்கு சிறி. அரசு மறைமுகமாக துணைபோகிறது

### கிளி.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கண்டனம்

(கிளிநொச்சி)

**மட்டக்களப்பில் தமிழர்புனர்வாழ்வுக்கழகம் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் திருகோணமலை அலிஒலுவ, சேருநுவர பகுதிகளில் தமிழ் மக்கள் மீது சிங்களக் காடையர்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஆகியவற்றிற்கு அரசு மறைமுகமாக துணைபோவதாகக் கூறி கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.**

மட்டக்களப்பில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அலுவலகம் மீது கடந்த 13 ஆம் திகதி அன்று கைக்குண்டு வீச்சினால் பாக்கியராசா தனபாலன் (வயது-22) என்பவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து 18 ஆம் திகதியன்று திருகோணமலை அலிஒலுவ, சேருநுவர பகுதிகளில் தமிழ் மக்கள் மீது சிங்களக் காடையர்களின் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளது. அதே வேளை தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தின் பாரவூர்தியும் தீயிட்டு எரிக்கப்பட்டது. இதனால் அதிலிருந்த படகுகள், கிடுகுகள் எரிந்து சாம்பராயின. அத்துடன் சாரதியும் தாக்கப்பட்டுள்ளார். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கெனக் கொண்டு செல்லப்பட்ட பொருட்களே எரியூட்டப்பட்டன. இந்தச் சம்பவத்தைப் பார்வையிடச் சென்ற போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வாகனமும் தாக்கப்பட்டது.

இவ்வாறான அராஜகச் செயல்களுக்கு அரசு மறைமுகமாகத் துணை போவதாக நாம் கருதுகின்றோம். இக்கண்காணிப்புக்குழு அமைதிக்கும் சமாதானத்திற்குமான ஒரு அமைப்பு என நாம் பார்க்கின்றோம். இவர்களுக்குக் கல்லெறிந்து தாக்கியதை மிக வன்மையாக நாம் கண்டிக்கின்றோம்.

இலங்கை வாழ் மக்களுக்கு இனமத பேதமில்லாது சேவையாற்றும் தமிழர்புனர்வாழ்வுக்கழகத்திற்கு ஏற்பட்டிருக்கும் இத்தாக் குதல் சம்பவத்தையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ் அடாவடித்தனங்களினால் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்கு ஏற்பட்ட நஷ்டத்தை அரசு ஈடுசெய்ய வேண்டுமெனவும் கோருகின்றோம்.

சிங்களக் காடையர்களின் இவ்வாறான அடாவடித்தனங்கள் சமாதான முயற்சியைக் குழப்புகின்ற நிலைமையை உண்டுபண்ணுகிறது.

நாடு பூராகவுமுள்ள சகல மக்களுக்கும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பாதுகாப்புடன் செயற்படுவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென இணையம் கோருகின்றது.




உலகவங்கியின் நிதியுதவியுடன் நீர்ப்திட்டத்தின் கீழ் மாகாண சபையினால் கிளிநொச்சி நகரில் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தாங்கியில் ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளதுடன், தமிழ் முற்றாகப் புறக்கணிக்கப்பெற்றுள்ளதனைப் படத்தில் காணலாம். (படம்:-சோதி)

## தாயகம் திரும்பிய அகதிகளுக்கு ஐ.ஓ.எம் நிறுவனம் உதவி

(மன்னார்)

மன்னாரில் ஐ.ஓ.எம் எனப்படும் நிறுவனம் இந்தியாவிலிருந்து மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு தொழில்வாய்ப்புக்கான உதவிகளை மேற்கொண்டு வருகின்றது.

இதனடிப்படையில் 2003 ஆம் ஆண்டு தைமாதத்திற்கு பின்பு இந்தியாவிலிருந்து நாடு திரும்பி மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு சுயதொழிலுக்காக விவசாயிகளிற்கான நீர் இறைக்கும் இயந்திரம், மீன்பிடி தொழிலாளர்களுக்கு மீன்பிடிப்படகு வலைகள் என்பனவும் கைத்தொழில் செய்வோருக்கு கைத்தொழில் உபகரணங்களையும் வழங்கியுள்ளது. இதேவேளை 25 ஆயிரம் ரூபா முதல் 75 ஆயிரம் ரூபா வரையான நிதியை மானியமாக வழங்கி அவர்களது தொழில்வாய்ப்புக்களை வளமாக்கி உதவி புரிந்து வருகின்றது. (18)



கடும் காற்றின் காரணமாக வேப்பமரமொன்று நேற்று நண்பகல் கணேசபுரம் வீதிக்குக் குறுக்காக முறிந்துவீழ்நதது. இதன் காரணமாக இவ்வீதியூடாக பலமணி நேரம் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டது. இதன்போது, மின்சாரம், தொலைத்தொடர்பு கம்பிகளும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. (படம்:சோதி)

## தொண்டுவேலை செய்தவர்களுக்கு நன்றியும் பாராட்டும்

(முல்லைத்தீவு)

வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயபொங்கல் உற்சவத்திற்கு தொண்டு வேலை செய்தவர்களுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கும் நிகழ்வு வற்றாப்பளை ஆலயத்தில் இடம் பெற்றுள்ளது.

நிகழ்வுகடந்த ஞாயிற்றுக்கிழமை வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பரிபாலனசபைத் தலைவர் மு.குகதாசன் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் கருத்துரைகளை வற்றாப்பளை மகாவித்தியாலய ஆசிரியர் சிவாகுகன், கலாச்சார உத்தியோகத்தர் மதியரசி, உப்புமாவெளி கிராமஅலுவலர் பரஞ்சோதி, முல்லை மகாவித்தியாலய ஆசிரியர் ஜெயவீரசிங்கம், முன்னாள் கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் மு.காசிப்பிள்ளை ஆகியோர் ஆற்றினர். இந்தப் பொங்கல் உற்சவத்திற்கு 24 மணி நேரம் பாதை திறந்த விடுதலைப்புலிகளிற்கும், சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்திற்கும் நன்றியினைத் தெரிவித்தனர். அத்துடன் இப்பொங்கல் உற்சவத்திற்கு உதவிய உடையார்கட்டு மகா வித்தியாலய சாரண மாணவர்களுக்கும், வற்றாப்பளை மகாவித்தியாலய சாரணமாணவர்களுக்கும், சிலாவத்தை தமிழ் வித்தியாலய சாரணர் மாணவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்ததோடு சாரணமாணவர்களுக்கு சிறப்பு சான்றிதழ் வழங்குவதற்கான தீர்மானமும் எடுக்கப்பட்டது. இக்கலந்துரையாடலின் போது அரச, அரசசார்பற்ற நிறுவனப்பிரதிநிதிகள் போராளிகள், காவல்துறையினர், ஆலயபரிபாலன சபையினர் நலன்விரும்பிகள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் மதிய போசன நிகழ்வும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (20)

### *நிர்வாகிகள் தெரிவு*

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரி வில் கமக்கார அமைப்புக்களின் ஒன்றியம் அண்மையில் தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக இ.சண்முகலிங்கம், உபதலைவராக சி.சச்சிதானந்தம், செயலாளராக வி.க இராசதுரை, உபசெயலாளராக மேரி அனஸ்ரலா, பொருளாளராக இ.குமாரகுலசிங்கம், ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக தி.உமாமகேஸ்வரன், இரா. செல்வராசா, தா.கிருஷ்ணசாமி, மோகராசா, க.ஸ்ரீபாலன், செ.குழந்தை வேல் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## பெற்றுக்கொள்க

(அலுவலகசெய்தியாளர்)

தமிழீழ போக்கு வரவுக்ழக பேருந்துகளில் பயணிக்கும் பொழுது மக்களால் தவறவிடப்பட்ட பிரயாணப் பைகள் மற்றும் தேசிய அடையாள அட்டை, பயண அனுமதி அட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி தமிழீழ போக்கு வரவுக்கழக பேருந்துப் பகுதியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது கீழ்க்காணும் பெயர்களையுடைய உரித்துடையவர்கள் ஆதாரங்களுடன் அலுவலக நேரத்தில் சமுகம் கொடுத்து பெற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளனர்.

சுப்பிரமணியம் யோகராசா தே.அ. அட்டை இல 433540140V நீர்வேலி வடக்கு, துரைசிங்கம் தேவகுமார் தே.அ.அட்டை இல 811494976V வத்திராயன் வடக்கு தாளையடி, வரதராஜன் பார்த்தீபன் தே.அ.அட்டை இல 773423644V, சுண்டிக்குழி யாழ்ப்பாணம், மார்க்கண்டு இரத்தினம் தே.அ.அட்டை இல 582290270V சிறுப்பிட்டி அச்செழு, மற்றும் பயண அனுமதி அட்டைகளுக்குரியவர்களான மார்க்கண்டு இரத்தினம் அமலிவனம் வட்டக்கச்சி, தருமலிங்கம் லீலாவதி புத்து வெட்டுவான் மாங்குளம், சாந்தலிங்கம் மயூரன் கிளிநொச்சி மத்திய கல்லூரி, ஜி.சுதர்சன் நீர்ப்பாசன எந்திரி அலுவலகம் யாழ்ப்பாணம், நடேசன் பூமணிமடம் வீதி யாழ்ப்பாணம், சந்திரன் கெங்கேஸ்வரன் மத்தாலோடை புன்னாலைக் கட்டுவன், பெர்ணான்டோ ரொசிற்றா பழைய பூங்காவீதி யாழ்ப் பாணம், சிவபாலன் இரவீந்திரன் நீதவான் முகாம் சங்கானை, கந்தன் அன்பழகன் நீதவான் முகாம் சங்கானை, அனுமந்தராஜ், விக்கினேஸ்வரன் ஐயன் கோவிலடி சண்டிலிப் பாய், நடேசுலிங்கன் ஐயன் கோவிலடி சண்டிலிப்பாய், அருச்சுணன் சஞ்ஜீகுமார் நீதவான் முகாம் சங்கானை, தேவதாஸ் அன்ரனிஸ்ரலின் பெரியவிளான் இளவாலை, கனகராஜ் கமல் முள்ளிவாய்க்கால்,த.லீலாவதி புத்து வெட்டுவான், சற்குணநாதன் நிரோஸ் யாழ்ப்பாணம், தற்காலிக அனுமதி அட்டைக்குரியஜெயகாந்தன் ஜெயரூபி அம்பாள் நகர் கிளிநொச்சி.(சோ)

## நாடகப்போட்டி

(புதுக்குடியிருப்பு)

யு.என்.எச். சி. ஆர். நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லைகல்வி வலையத்தால்உலக அகதிகள் தினத்தையிட்டு நடாத்தப்பட்ட எழுச்சியடைவோம் என்ற தொனிப்பொருள் அடங்கிய நாடகப்போட்டியின் இறுதிப்போட்டிகள் கடந்த திங்கட்கிழமை அன்று புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையில் இடம்பெற்றுள்ளது. முல்லை.வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ.பேரின்பநாயகம் தலைமையில் இடம் பெற்றது. இப்போட்டியில் முதலாம் இடத்தை புதுக்குடியிருப்பு ( வேணாவில்) சிறிமுருகானந்தா வித்தியாலயமும், இரண்டாம் இடத்தை செம்மலை மகா வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையும் பெற்றுக் கொண்டன.

இந் நிகழ்வில் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (08)

## கலைக்குழு தெரிவு

(மல்லாவி)

மல்லாவிப் பிரதேசத்தில் கலைக் குழு தெரிவுக் கூட்டம் பிரதேச அரசியல் துறைச் செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பிரதேசப் பொறுப்பாளர் செ.புனிதன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன், கலந்து கொண்டு கருத்துரைக்கையில், கடந்த காலங்களில் கலை வடிவம் ஊடாகவும், ஊடகங்கள் ஊடாகவும், விடுதலைப் போராட்டத்தை உணர வைத்த வடிவங்களும், போராட்ட இணைப்பும் இக் கலைஞர்களால் தான் ஏற்பட்டன என்றும் அத்துடன் வீதி நாடகங்கள் ஊடாகவும் அரசியல் நிலைமைகளை தெரியப்படுத்துவதன் மூலமே இன்று மக்கள் அரசியல் நிலைமைகளை அறிந்து கொள்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கலைக்குழுத் தெரிவு இடம்பெற்றதோடு முல்லை. மாவட்ட அரசியல்துறைதுணைப் பொறுப்பாளரும் கருத்துரை வழங்கினார். இதில் தலைவராக ம.இராஜகுலசிங்கமும், செயலாளராக செல்விறுயினாவும் பொருளாளராக சுபநேசனும் உபதலைவராக மயில்வாகனமும் உப செயலாளராக சிவலிங்கமும் தெரிவு செய்யப்பட்டதுடன் ஏழு உறுப் பினர்கள் தெரிவும் இடம் பெற்றது. (24)

## தொற்றுநோய் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் கருத்தூட்டல்

(முல்லைத்தீவு)

"சுகம் தரும் சுகாதாரம்" என்ற தொற்று நோய்கள் தொடர்பான விழிப்புணர்வூட்டும் கருத்தூட்டல் நிகழ்வு முல்லை.மாவட்டத்தில் இடம்பெற்று வருவதாக முல்லை.மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதில் வயிற்றோட்டம், காய்ச்சல்,காசநோய் போன்ற நோய்கள் தொடர்பான விழிப்புணர்வூட்டும் கருத்தூட்டல் நிகழ்வுகளே இடம்பெற்று வருகின்றன. இக் கருத்தரங்கு செம்மலை, அளம்பில், நாயாறு ஆகிய கிராமங்களில் நடைபெற்று முடிந்ததாகவும் ஏனைய கிராமங்களில் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வுகள் அனைத்தும் அளம்பில் பொது சுகாதார பரிசோதகர் தவராசா தலைமையில் இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (20)

# சிறிலங்காப்படையினரின் பயிற்சி நடவடிக்கை; சாவகச்சேரி கடல்நீரேரி தொடர்ந்தும் ஆக்கிரமிப்பு

## -தொழில்வாய்ப்பை இழந்து தொழிலாளர்கள் அவதி

(சாவகச்சேரி)

**சாவகச்சேரி கடல் நீரேரிப்பகுதியில் பெரும் பகுதியைதமது பயிற்சி நடவடிக்கைகளுக்கென கூறி படைத்தரப்பு தொடர்ந்தும் ஆக்கிரமித்து வருவதாக அப்பகுதி கடற்றொழிலாளர் சங்கங்கள் குற்றச்சாட்டியுள்ளது.**

ஏற்கனவே மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டிருந்த கடல்நீரேரியில் மேலும் பெரும் பகுதியைத் தமது சூட்டுப்பயிற்சிக்கென தற்போது ஆக்கிரமித்தலையடுத்தே இக் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டின் முற்பகுதிகளில் இடம்பெற்ற யுத்தநடவடிக்கைகளையடுத்து படைத்தரப்பு சாவகச்சேரி, தனங்கிளப்பு வீதி முதல் கச்சாய் வரையான கடல்நீரேரியில் மீன பிடியில் ஈடுபட கடற்றொழிலாளர்களுக்கு முற்றாகத் தடை விதித்திருந்தது.

எனினும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் மீனவர்களது போராட்டங்களையடுத்து மட்டுப்படுத்தியளவு கடற்பரப்பை படைத்தரப்பு விடுவித்திருந்தது.

எனினும் அக்கடற்பரப்பு தமது துப்பாக்கிச் சூட்டுப்பயிற்சிக்கான எல்லையெனக் கூறி மீண்டும் தடை செய்ததுடன் அப்பகுதியில் மீனவர்கள் நடமாடவும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே மேலும் புதிதாக கடற்பகுதியை தமது பயிற்சி நடவடிக்கைகளுக்கென தற்போது படைத்தரப்பு ஆக்கிரமித்துள்ளது. இதனால் அக்கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த பெருமளவான கடற்றொழில் குடும்பங்கள் தொழில் வாய்ப்பை இழந்துள்ளன.

இவ்விடயம் தொடர்பாக அப்பகுதி கடற்றொழில் அமைப்புக்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புகார் செய்துள்ளன. (27)

# கடற்றொழில் பரிசோதகர்களுக்கு குடாநாட்டில் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றுவதற்கு கடற்றொழில் பரிசோதகர்கள் பற்றாக்குறையாகக் காணப்படுவதாக கடற்றொழில் திணைக்களத்தினர் தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் கீழ் கடமையில் ஈடுபடுவதற்கு 15 கடற்றொழில் பரிசோதகர்கள் தேவைப்படுகின்றனர்.

ஆனால் தற்போது இங்கு ஏழு கடற்றொழில் பரிசோதகர்கள் மட்டுமே கடமையாற்றி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக யாழ்.மாவட்டத்தில் கடற்றொழிலாளர்களின் தொழில் மேம்பாட்டு நடவடிக்கைகளை உரிய முறையில் திருப்திகரமாக முன்னெடுக்க முடியாதிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால் கடற்றொழில் மேம்பாட்டு நடவடிக்கைகளில் பல பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (33)

# யுனிசெப் உதவி

(யாழ்ப்பாணம்)

உலகவங்கியின் வடக்கு கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்பட்டுவரும் 1000வீடுகளுக்குமான மலசல கூட வசதிகளை ஏற்படுத்த யுனிசெப் அமைப்பு முன்வந்துள்ளது.

இந்தத்தகவலை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

உலகவங்கியினால் வடக்கு கிழக்கு வீடமைப்பு திட்டத்தின் கீழ் யாழ்மாவட்டத்தில் 1000வீடுகளைஅமைக்கும் திட்டம் இந்த ஆண்டிலிருந்து அமுல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வீடமைக்கும் திட்டத்துக்கான நிதியை வழங்கிய உலக வங்கி மலசல கூடத்தினை அமைப்பதற்கு எந்த ஒதுக்கீடுகளையும் செய்யவில்லை.

எனினும் வீடமைப்புத்திட்டத்தில் மலசல கூடம் மிகவும் அவசியம் என்பதை கருத்தில் கொண்டு இவ் வீடுகளுக்கான மலசல கூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க யுனிசெப் முன்வந்துள்ளது என அரசாங்க அதிபர் கே.கணேஷ்மேலும் தெரிவித்தார். (33)

# யாழ்.இல் பொருத்தமற்ற இடங்களிலுள்ள மதுபானக்கடைகளை அகற்றக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பாடசாலைகள், கோவில்கள், கல்விநிறுவனங்கள் என்பவற்றுக்குச் சமீபமாக அமைக்கப்பட்டிருக்கும் மதுபானக் கடைகளை அகற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் பாடசாலைகள், கோவில்கள், மற்றும் கல்வி நிறுவனங்கள் என்பவற்றுக்கு மிகவும் சமீபமாக பல மதுபானசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால் மாணவர்களும், இளம் சமூகத்தினரும் மதுப்பழக்கத்துக்கு அடிமையாகி வருகின்றமை யாழ்.குடாநாட்டில் அதிகரித்துள்ளது.

இந்த அபாயகரமான சூழ்நிலையைத் தவிர்க்கும் நோக்குடன் இளம் சமூகத்தினர் கூடும் இடங்களுக்கு நெருக்கமாக மதுபானக்கடைகள் அமைக்கப்படுவது தடுத்து நிறுத்தப்படவேண்டுமெனவும் இதற்காக சிறிலங்காப் பொலிசாரும், மதுவரி திணைக் களத்தினரும் ஆக்கபூர்வமாக செயற்படவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

# தென்மராட்சி அழகக சங்கத்திற்கு தொழில் உபகரணம் வழங்கக் கோரல்

(தென்மராட்சி)

கடந்த காலப் போரினால் நலிவுற்ற நிலையில் உள்ள அழகக தொழில்புரிவோர் தமக்கு நவீன தொழில் உபகரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த காலப் போரினால் தமது அழகக நிலையங்கள் அனைத்தும் அழிந்து போனமையால் தற்பொழுது நலிவுற்ற நிலையில் அழகக தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

தமக்கு நாகரீக உலகின் மாற்றத்திற்கு ஏற்ப தொழில் உபகரணங்களை வழங்கவும் நலிந்து போயுள்ள தமது தொழிலை மேம்படுத்தத் தேவையான உதவிகளை வழங்கிடவும் நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என அவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (28)

# சுகாதார நடைமுறைகளை பேணும்படி உணவகங்களுக்குப் பணிப்பு

(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டில் உள்ள உணவகங்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் என பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் உத்தர விட்டுள்ளார்.

நாவலர் கலாசார மண்டபத்தில். நடைபெற்ற உணவக உரிமையாளர்களுக்கான கூட்டத்தில் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

உணவகங்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பொது மக்களின் சுகாதாரத்தினை உறுதி செய்ய வேண்டும் உணவுகளை வழங்குவதில், பொருட்களை எடுப்பதில் சுகாதார நடைமுறைகள் மிக முக்கியமாக பின்பற்றப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (28)

## -யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும்-

# கடந்தகால யுத்த அனர்த்தத்தால் 6421 சிறார்கள் பெற்றோரை இழந்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் 6421 சிறார்கள் பெற்றோர்களை இழந்துள்ளதாக யாழ்.அரச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் 530 சிறுவர்கள் தமது தாய், தந்தையர் இருவரையும் இழந்திருப்பதாகவும், 3454 சிறுவர்கள் தமது தந்தைமார்களை இழந்திருப்பதாகவும், 2437 சிறுவர்கள் தமது தாய்மார்களை இழந்திருப்பதாகவும் அந்தத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பெற்றோரை இழந்த சிறுவர்கள் பலர் மனவிரக்திகளுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், இவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படுவது அவசியம் என்றும் அரச செயலக தகவலில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (33)

## மிருசுவில் வாகனத் தரிப்பிடத்தில்

# பயணிகளுக்கு பெரும் அசௌகரியம்; நீக்கும்படி அரச அதிபரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்றரை வருடங்களாக யாழ். குடா நாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு செல்லும் பயணிகள் மிருசுவில் தரிப்பிடத்தில் நின்று காலை ஏழுமணிக்குப் பின்பே ஏ-9 பிரதான சாலையில் பயணத்தைத் தொடர்கின்றனர்.

இந்த இடைப்பட்ட நேரத்திற்குள் இப் பகுதியில் தரித்து நிற்கும் பார ஊர்திகளும் பயணிகள் வாகனங்களும், பேருந்துகளும் இப்பகுதியில் நீண்ட வரிசையில் நிற்பதுடன் இதில் வந்து இறங்கும் பெருமளவான பயணிகள் அத்தியாவசிய பிரச்சினையாக உள்ள மலசல கூட வசதிகளோ குடிநீர் வசதிகளோ இல்லாமையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். இது குறித்து உடனடி நடவடிக்கை ஒன்றை எடுக்க யாழ். அரசாங்க அதிபர் முன்வர வேண்டும் என பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (28)

# தென்மராட்சி ஆங்கில ஆசிரியர்களுக்கு இரு நாள் பயிற்சிக் கருத்தரங்கு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இருநாள் பயிற்சிக் கருத்தரங்கு இடம் பெறவுள்ளது. சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இன்றும் நாளையும், காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 மணிவரை இப் பயிற்சிக் கருத்தரங்கு நடைபெறும். இப் பயிற்சி வகுப்பில் இப் பிரதேசத்தில் கல்வி கற்பிக்கும் ஆங்கில ஆசிரியர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும் படி தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.(28)

# படையினரின் இயற்கை வள அழிப்பினால் குடாநாடு பாலைவனமாக மாறும் அபாயம்

## சூழல் பாதுகாப்பு அமைப்பு குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சிறிலங்காப் படையினராலேயே பெருமளவிலான பனை, தென்னை வளங்கள் அழிக்கப்பட்டு வருவதாக சூழல் பாதுகாப்பு அமைப்பு பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ளது.

பெரும் தோட்டங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு அவை குற்றிகளாக மாறி வருகின்றன. இன்னும் சில வருடங்கள் இப்படைகள் இங்கு நிலை கொள்ளும் எனில் யாழ். குடாநாடே பாலைவனமாக மாறும் அபாயச் சூழல் ஏற்படும்.

யாழ். குடாநாட்டில் 95ஆம் ஆண்டுக்குப் பின்பு படிப்படியாக பனை, தென்னை மரங்கள் பல இலட்சக்கணக்கில் இராணுவத் தேவைகளுக்காக அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் குடாநாட்டு விவசாயிகள் தமது பொருளாதார வளங்களை இழந்தது. இயற்கை சூழலுக்கும், பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதெனவும், அவ்வமைப்புத் தெரிவித்துள்ளது. (28)

# மாகாணசபையை எதிர்த்த ஜே.வி.பியினர் — தற்போது அதிலிருந்து சண்டித்தனம் கதைக்கின்றனர்.

வடக்கு கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் புனர்வாழ்வுமீள் கட்டமைப்பு இலங்கையில் பாரிய அரசியல் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் தலைவிதியை இது இப்பொழுது தீர்மானிக்கப் போகின்றது.

வடக்கு கிழக்கில் இரண்டு கிலோ மீற்றர் கடற்கரைப் பிரதேசத்தில் மீள் கட்டமைப்பு புனர்நிர்மாண வேலைகளை ஒரு வருடகால எல்லைக்குள் முடிப்பதற்கு மாத்திரம் அரசும் விடுதலைப்புலிகளும் இக்கட்டமைப்பை மேற்கொள்ளப் போகின்றனர். இதற்காக பிரதேச, மாகாண, மாவட்டரீதியாக சபைகள் அமைக்கப்படவுள்ளன. இச்சபைகளினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை பரிசீலனை செய்தபின் அப்பிரதேச அபிவிருத்திகளுக்காக தேவையான நிதி ஒதுக்கப்படும்.

ஆனால் இதற்கு ஜே.வி.பியும் ஏனைய சில அரசியல் கட்சிகளும் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன. அவர்கள் வடக்கு கிழக்கு புனர்நிர்மாண வேலைகளில் புலிகளை இணைத்துக் கொண்டால் புலிகள் இதனால் பெரும்பான்மையை நிரூபித்து விடுவர். இதற்கு நாங்கள் எதிர்ப்பை தெரிவிக்கின்றோம் என்பது




ஜே.வி.பியின் வாதமாகும். மாகாண சபைகள், அந்தந்த அரசாங்க அதிபர்களின் வழிகாட்டல் மூலமாக அப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற விவாதத்தையும் ஜே.வி.பி.யினர் முன் வைக்கின்றார்கள். ஆனபடியால் புலிகளை இப்புனர்நிர்மாண கூட்டு ஒப்பந்தத்தில் இணைத்துக் கொள்ள வேண்டாமென ஜே.வி.பி.அரசை நிர்ப்பந்தித்துள்ளது. ஆனபடியால் அரசு இப்பணியை எப்படி மேற்கொள்வதென சிந்திக்கத் தொடங்கியுள்ளது. கண்டி உதவிகள் வழங்கும் மாநாட்டிலும் அதன் பிறகு நிதி வழங்கும் உயர்மட்ட பிரதிநிதிகளிடமும் அரசு சுனாமி நிவாரண கூட்டு ஒப்பந்தம் கைச் சாத்திடப்படும் எனக் கூறி உள்ளது. சுனாமி கூட்டு நிவாரண ஒப்பந்தம் மீள் கட்டுமான பணிகளுக்கு மிக அவசியமென முன்னைய அமெரிக்க சனாதிபதி பில்கிளிங்டன் இங்கு வருகை தந்தபொழுது வலியுறுத்தியுள்ளார். வடக்கு கிழக்கை வெகு விரைவில் புனரமைக்க வேண்டுமெனவும் அதற்கு 60 சதவிகித நிதி ஒதுக்கப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யூன்மாதம் அரச நிர்வாகத்தை நிர்ணயிக்கக் கூடிய மாதமாக கருதப்படுகிறது. இம்மாதம் சுனாமி கூட்டு ஒப்பந்தம் சம்பந்தமாக இரண்டில் ஒன்றை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். இது சம்பந்தமாக வெளிநாடுகளின் அனுசரணையைப் பெறுவதற்கு சனாதிபதி அவர்கள் முதன் முதலாக இந்தியப் பயணத்தை மேற்கொண்டார். சுனாமி சம்பந்தமாக இந்தியா கடைப்பிடிக்கும் நிலைப்பாடுகள் என்ன? என்பதைப் பற்றி அறிந்து கொள்வதற்காக இந்திய வெளியுறவு செயலாளர் சியாம் சரனை சந்தித்த போது சந்திரிகா நோர்வே பிரதிநிதி எரிக்சூல்ஹெய்ம், கூட்டு ஒப்பந்தம் செய்வதில் எந்தவித தவறும் கிடையாது எனத் தன்னிடம் கூறியதை சுட்டிக்காட்டினார். எரிக்சூல்ஹெய்ம் வெளியிட்ட கருத்துக்களுக்கு இந்திய அரச ராஜதந்திரிகளின் அரசியல் முட்டுக் கட்டையாக இருக்கலாமென ஜே.வி.பி நம்பியது. ஆனால் இந்திய அரசு எவரும் எதிர்பார்க்காத விதத்தில் இரண்டு வாரங்களில் இரண்டு தடவைகள் தங்களின் இராஜதந்திர நிலைப்பாட்டை மாற்றினார்கள். கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் நிருபமாராவ் சனாதிபதி சந்திரிகா அவர்களை சந்தித்து சுனாமி நிவாரண கூட்டு ஒப்பந்தத்தின்பொழுது நடுநிலை வகிக்கப்போவதாக இந்திய அரசு உத்தேசித்துள்ளதாகவும் ஆனபடியால் இது சம்பந்தமாக மௌனத்தை கடைப்பிடிப்பதாகவும் கூறினார்.

பின் சனாதிபதி அவர்கள் சுனாமி கூட்டு ஒப்பந்தம் சம்பந்தமாக நகல் திட்டத்தை தயாரித்துக் கொண்டு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்கச் சென்றார். பின் உத்தியோக பற்றற்ற முறையில் காங்கிரஸ் கட்சியின் தலைவியைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் இந்தியா தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டதுடன் சுனாமி கூட்டு ஒப்பந்தத்திற்கு தனது பூரண ஆதரவை வழங்குவதாக இந்திய அரசு அறிவித்தது. இந்தத் தீர்மானம் சனாதிபதி அவர்களுக்கு பெரும் உந்து சக்தியாக அமைந்துள்ளது. இந்தியாவின் ஒத்துழைப்பும் பில்கிளிங்டனின் ஒத்துழைப்பும் அரசுக்கு கிடைத்தது. பெரும் வெற்றி என அரசு நம்பியது. ஆனால் ஜே.வி.பி இதை எதிர்ப்பதால் எந்த பலனும் கிடையாது. இப்பொழுது சனாதிபதி இருதலைக் கொள்ளி எறும்பின் நிலைக்கு அரசியலில் தள்ளப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி எப்படி ஆட்சி நடத்தியதோ அதே மாதிரியானதும் அதற்கு கொஞ்சம் வித்தியாசமானதுமான ஆட்சியைத்தான் சிறிலங்கா சுதந்திர கட்சி நடத்தி வருகின்றது. தற்பொழுது கூட்டு ஒப்பந்தத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தாலும் இந்தப் பொறுப்பு முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்ளவேண்டும். என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாகும். ஆகவே இப்பொழுது பந்தை சந்திரிகாவின் கையில் கொடுத்து விட்டார்கள். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு முடியாது. காரணம் அடுத்து வரப்போகும். சமாதானப் பேச்சு வார்த்தைகளை அரசு முன்னேடுத்துச் செல்ல வேண்டுமானால் விடுதலைப் புலிகளின் நல்லெண்ணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அப்படி அல்லாமல் சுனாமி கூட்டு ஒப்பந்தத்தை அரசியல் மயமாக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முயற்சி செய்தால் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நின்றுவிடும். அதனால் பாரிய விளைவுகளை ஐக்கிய தேசியக் கட்சி சந்திக்க நேரிடும்.

இதனால் சிறிலங்கா சுதந்திர கட்சிக்கு எந்தப் பாதகமும் ஏற்படாது. இதற்கு முன்பாக தனக்கு சுனாமி கூட்டு ஒப்பந்தத்தைப் பற்றி எதுவும் தெரியாது. எனப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளதை நாங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆனபடியால் சுனாமி கூட்டு ஒப்பந்தத்திற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற அங்கத்தவர்கள், அமைச்சர்கள் மட்டத்திலும் மறைமுக எதிர்ப்புகள் உண்டு. ஆனால் சந்திரிகாவை எதிர்ப்பதற்கு எவரும் முன் வரமாட்டார்கள். இதேபோல் 1987 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தன -ராஜீவ் செய்து கொண்ட இலங்கை -இந்திய ஒப்பந்தம் கையொப்பம் இடும்பொழுது அன்றைய பிரதமர் பிரேமதாச, பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி போன்றோர் எதிர்த்தனர். ஆனால் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட சனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை அவர்களால் எதிர்க்க முடியவில்லை.

தற்போதைய அரசியல் நிலவரங்களின்படி சனாதிபதியால் தயாரிக்கப்பட்டுள்ள சுனாமி நிவாரண கூட்டு ஒப்பந்தம் என்னவென்று சரிவர ஒருவருக்கும் தெரியாது. தற்பொழுதும் இந்த ஒப்பந்தத்தில் என்ன அடங்கியுள்ளதென்பது எவருக்கும் தெரியாது இது சம்பந்தமாக மக்கள் தெரிந்து கொள்வது மிக அவசியமாகும். 1987 ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் இலங்கை மக்களிற்கு என்னவென்று அன்றைய சனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அறிவிக்கவில்லை. 2002 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளும் ரணில் விக்கிரமசிங்கவும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பற்றி கைச்சாத்திட்ட பின்னரே நாட்டு மக்களுக்கு அன்றைய பிரதமர் ரணில்விக்கிரசிங்க அறிவித்தார். ஆனால் தற்பொழுது



சனாதிபதி எதைச் செய்யப்போகிறார் என்று சொல்ல முடியாது. ஜாதிக ஹெல உறுமய ஜே.வி.பி இரண்டு கட்சிகளும் இதனை மிக உன்னிப்பாக கண்காணித்துக் கொண்டு வருகின்றன. எது எப்படி இருந்தாலும் நிச்சயமாக கூட்டு ஒப்பந்தத்தில் சனாதிபதி கையொப்பம் இடுவார். இது சம்பந்தமாக பாராளுமன்றத்தில் அறிவிக்கப் போவதாக சனாதிபதி கூறியுள்ளார். இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் ஒத்துழைப்புத் தருவதாகக் கூறியுள்ளது. இலங்கையில் இனப் பிரச்சினையை அரசியல் மயமாக்கியபடியால் இரண்டு அரசாங்கங்களும் ஆட்சிக் காலத்தில் இந்த நாட்டில் பெரும் பேரழிவுகளை உண்டுபண்ணின. இப்பிரச்சினையை என்னுடைய ஆட்சிக் காலத்தில் தீர்த்துவைப்பேன். என்று சனாதிபதி சந்திரிகாவும், எனது ஆட்சிக் காலத்தில் இப்பிரச்சினையை தீர்த்துவைப்பேன், என ரணில் விக்கிரமசிங்கவும் கூறி வருகின்றார்கள். இப்பிரச்சினையை தீர்த்து வைத்தால் அதிகமான ஆதரவு தங்களுக்கு கிடைக்குமென சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் நினைக்கின்றன. ஆனால் நாட்டில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி இலாபமீட்டும் நோக்கோடு தற்பொழுது ஜே.வி.பி செயற்பட்டு வருகின்றது.

1987 ஆம் ஆண்டு மாகாண சபையை அமுல் படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்ட பொழுது நாட்டில் பெரும் சத்தியாக்கிரகப் போராட்டங்கள்- கோட்டை ரயில்வே நிலையத்திற்கு முன்பாக உண்ணாவிரதபோராட்டம் கொழும்பு அரசமரத்தடி போராட்டம் போன்றவைகளை இந்த பௌத்த பிக்குகள் அமைப்பு, ஜே.வி.பி இரண்டும் சேர்ந்து நடத்தின. மாகாண சபை வேட்பாளர்களை ஜே.வி.பியினர், கொன்று குவித்தார்கள். இதன் பிரதிபலன்களை 2010 ஆம் ஆண்டு நாட்டு மக்கள் அனைவரும் அனுபவிப்பார்கள். என ஜே.ஆர் ஜெயவர்த்தன அன்று கூறினார். ஆனால் அவர் தனது நடவடிக்கைகளை நிறுத்தவில்லை. அவர் மாகாண சபையை அமுல் படுத்தினார். நாடு பிளவுபட வில்லை. யுத்தமும் முடிந்த பாடில்லை. இவைகள் எல்லாம் செய்த ஜே.வி.பி யினர் இப்பொழுது மாகாண சபைகளில் நுழைந்து கொண்டு சண்டித்தனம் காண்பிக்கின்றார்கள். தாங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கும் ஆதரவுகளை வாபஸ் பெற்றதுடன் மாகாணசபை முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரேவுக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையும் கொண்டு வந்தார்கள். மக்கள் ஆதரவை பெறுவதற்கும் அரசியல் புகழ் பெறுவதற்கும் ஜே.வி.பி இப்பொழுது முயற்சி செய்கின்றது. இவர்கள் இந்த நாட்டின் பற்றாளர்கள் அல்ல. இவர்களுக்கு எல்லாம் இந்நாட்டு வாக்காளர் பெருமக்களே வகை சொல்லி ஆகவேண்டும். யூன், யூலை இரண்டு மாதங்களும் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் மாதங்களாகும். 1977 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ஜே.ஆர்.ஆட்சியைக் கைப்பற்றினார். 1983 ஆம் ஆண்டு யூலை கலவரம் இந்நாட்டில் ஏற்பட்டது. அதேபோல் யூன் மாதத்தில் சுனாமி கூட்டு ஒப்பந்தத்தையும் செய்யப் போகிறார்கள். தற்பொழுது நாட்டு மக்களின் நன்மதிப்பையும்

லங்காதீப சிங்கள நாழிதழ்
ரஞ்ஜித் ஆனந்த ஜயசிங்க
மொழியாக்கம் :– அ.சக்திவேல்


சர்வதேச புகழையும் பெறுவதில் சனாதிபதி முயற்சி செய்கின்றபடியால் நிச்சயமாக இதில் இவர் கையொப்பமிட வேண்டும். ஆனபடியால் தமிழ் மக்களின் ஆதரவையும் நல்லெண்ணத்தையும் பெற்றுக் கொள்வதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு நல்ல சந்தர்ப்பமாகும். இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தைரியமாகவும் விவேகமாகவும் சனாதிபதி செயற்படுவாரேயானால் மேலும் இவரின் புகழ் எமது நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் ஓங்கும்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# கிராமத்துக்கு நீர்மின்; ஒரு தொழிலாளியின் விடாமுயற்சி

1990ஆம் ஆண்டு ஆனி மாதம் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்தபோது சிங்கள அரசாங்கம் தமிழர் தாயகப் பகுதி மீது மிக மிக இறுக்கமான பொருளாதாரத் தடையை விதித்தது. சுதந்திர வேட்கை கொண்டு போராடும் மக்களைப் பொருளாதார ரீதியில் நெருக்கிப்பட்டினி போட்டு பணிய வைக்கும் தந்திரோபாயமாக இதனைக் கையாண்டது.

ஆனால் அதற்கு எதிராக தமிழ் மக்கள் மிக மூர்க்கமாகப் போராடி வெற்றிபெற்றார்கள்.



எஸ்லோன் பைப்பில் செய்த படகு.

யுத்தம் நடைபெற்ற போது மண்ணெண்ணெய்க்குக் கூட தடை விதிக்கப்பட்டதால் அதிக விலை கொடுத்தே அதனை வாங்க வேண்டிய நிலையில் நீர் இறைக்கும் இயந்திரத்தை இயக்கும் சில உதிரிப்பாகங்களை அகற்றிவிட்டு கையால் சுழற்றி நீர் இறைத்தார். முத்துஜயன் கட்டைச் சேர்ந்த விவசாயி ஒருவர். அவர் அன்று சிறிய அளவில் மின்சாரத்தைப் பிறப்பிக்க எடுத்த முயற்சியின் அனுபவத்தைக் கொண்டு இப்பொழுது அதனை விரிவாக்கும் முயற்சியில் வெற்றிபெற்று தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பாராட்டையும் நிதியுதவியையும் பெற்றுள்ளார்.

உலகையே இயக்கிக் கொண்டிருக்கும் மின்சாரம் இன்று தமிழர்தாயகத்தின் பல பகுதிகளுக்கும் எட்டாக்கனியாகத்தான் உள்ளது.

ஆனால் தனது முயற்சியால் அதனைப் பெற்றுக்கொண்டுள்ளார். இவர். தனது கிராமத்தில் 30 குடும்பங்களுக்கு மின் வழங்க தன்னால் முடியுமென முத்து ஜயன் கட்டுக் குளத்தின் கீழ்ச் செல்லும் கழிவு நீரைப்பெற்று நீர் மின் உற்பத்தியினை மேற்கொண்டுவரும் பசுபதிராதா கிருஷ்ணன்(ராதா) (வயது-40) என்பவரிடம் அவரது இந்த முயற்சி குறித்துக் கேட்டபோது;

* இதன் செயற்பாட்டைப் பற்றிக் கூறுங்கள்?

குழாயினூடாக வரும் நீரானது வேகமாக வந்து காற்றாடியில் விழ இந்தக்காற்றாடி சுழலும். இக்காற்றாடி வேகமாகச் சுழலுவதற்கு ஏற்றவாறு இருசக்கர உழவு இயந்திரத்தின் கியர்பொக்ஸை இணைத்துள்ளேன். அது வேகமாக சுற்றுவதனால் மின் பிறப் பாக்கியும் சுற்றப்பட்டு மின் உற்பத்தியாக்கப் படு கின்றது.

* இச்செயற்பாட்டைத் தூண்டிய காரணங்கள் என்ன என்று கூற முடியுமா?

ஆம் இச்செயற்பாட்டைத் தூண்டுவதற்கு இரண்டு மூன்று காரணங்களைக் கூறலாம். ஒன்று யுத்தகாலத்தில் மண்ணெண்ணை அதிக விலையேற்றத்தால் நீர் இறைக்கும் இயந்திரத்தின் (பிஸ்றன் றொட்). ஆகியவற்றைக் கழற்றிவிட்டு சைக்கிள் றிம்மில் நாடாவைக் கொழுவி கையால் சுத்தி நீர் இறைத்தேன்.

மற்றது இந்த நீர் விழும் இடத்தில் மூன்று அங்குல விட்டமுடைய குழாய் ஒன்றை வைத்து அதனூடாக வந்த நீரில் முழுகிய போது உச்சந்தலையில் சிறிது நோ ஏற்பட்டது. அந்தக்கணம் சிந்தித்தேன். கொஞ்ச நீர் வந்து விழும்போதே இவ்வளவு நோ ஏற்படுகின்றது. பெரிய குழாயை வைத்து அதனூடாக நீர் வந்தால் அதிகமான தாக்கம் வரும். அதில் காற்றாடி சுழலும் எனச் சிந்தித்தேன்.



* இது போன்ற செயற்பாட்டை வேறு எங்காவது முன்னர் பார்த்துள்ளீர்களா?

இல்லை.

*இதைப்பற்றிப் படித்திருக்கின்றீர்களா?

இல்லை. நான் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டு வட்டக்கச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பம் முதல் எட்டாம் வகுப்புவரை மட்டும்தான் படித்திருக்கிறேன். ஆனால் நான் இயந்திரங்களின் செயற்பாட்டில் அதிக கவனம் செலுத்தியமை. இதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

* நெடுந்தீவிலிருந்து இங்கு வரக் காரணம்?

எனது அப்பாவின் ஆசிரியர் தொழில்காரணமாக முல்லை. மாவட்ட பாடசாலைகளுக்கு வந்ததே நாமிங்கு வரக்காரணம்.

* இதன்ஆரம்ப முயற்சி பற்றிக் கூறுங்கள்?

ஆரம்ப நிலையில் சுப்பர்கப் (சி90) உள் டையல் (கொயில் மோட்டர்) ஐச் சுற்றி மின்சாரம் எடுத்தேன். முதலில் நான் செய்த முயற்சிகளில் தவறுகள் இருந்தது. எங்கள் வீட்டுச் சாப்பாட்டுத் தட்டுகளையும் பொருத்தி கயிறு போன்றவற்றால் செய்தேன். இதனில் ஏற்பட்ட பிழைகளைத் திருத்திச் செய்தமையால்தான் இந்த முயற்சி வெற்றி தந்தது. வயர்களுக்குப் பதிலாக மெல்லிய தகரங்களைச் சிறிதுசிறிதாக வெட்டி கம்பி போன்று இழுத்து இன்று வரை பாவித்து வருகின்றேன். தற்போதுதான் அலுமனியக் கம்பிகளை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லைமாவட்டப் பொறுப்பாளர் தந்துள்ளார்.

* இதை மேலும் திருத்தியமைக்க முயற்சிக்கவில்லையா?

முயற்சி செய்கின்றேன். அதாவது மறித்துக் கட்டிய நீரை மேலும் மறித்து கட்டுவதற்கும் முயற்சி செய்கின்றேன். இதனால் தற்போது மூவாயிரம் வாற்று மின்பிறப்பாக்கியில் எடுக்கும் மின்னின் அளவு 2850 வாற்று. ஆனால் மேற்சொன்னது போன்று செய்தால் 15 கிலோ வாற்று மின் பிறப்பாக்கி மூலம் மின் எடுத்து அதிலிருந்து மின்மாற்றியூடாக அனுப்பினால் மேலும் மின்னை அதிகமாகப் பெறலாம். தற்போது பெறப்படும் மின்சாரம் எனது வீடு பிள்ளையார் கோவில் உட்பட ஐந்து இடங்களுக்கு பாவிக்கப்படுகின்றது.

* இதனால் முத்துஜயன்கட்டு முழுக்க வழங்க முடியுமா?

முடியும் ஆனால் முத்து ஜயன்கட்டைப் பொறுத்த வரை ஒரு நபருக்கு மூன்று ஏக்கர் வீதம் நிலம் வழங்கப்பட்டுள்ளதால் வீடுகள் தூரத் தூரவே உள்ளன. அதிக தூரம் செல்லச்செல்ல வயர்களின் தூரமும் அதிகமாகும். தற்போது 30 வீடுகளுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளேன்.



* இதற்கு ஏற்பட்ட செலவீனங்கள் எவ்வளவு?

தற்போது நாலரை இலட்சம் ரூபா வரை செலவளிந்துள்ளது. இதனைத் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அண்ணா அவர்கள் வந்து பார்த்துவிட்டுச் சென்றார். பிறகு கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அண்ணா அவர்களும் வந்து பார்த்துச் சென்றுள்ளார்.

* உங்களுக்கு நிதி எவ்வாறு கிடைத்தது.

நிதி என்று சொல்லும்போது ஆரம்பத்தில் விவசாயத்தொழிலை மேற்கொண்டு அது நட்டமடைந்த பின்னர் கடற்புலிகளுக்கு கருங்கல் உடைத்துக் கொடுப்பேன். அதில் வருகின்ற பணத்தை அப்படியே அரைவாசி அவர்களிடம் விட்டு விட்டு மிகுதி அரைவாசியைத்தான் எமது வீட்டுச் செலவீனங்களுக்கு எடுப்பேன். இவ்வாறு சேமித்த பணத்தின் மூலமும் கடற்புலிப் போராளிகள் அளித்த ஊக்கமும் இதன் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியுள்ளது. கடந்த 18.06.2005 அன்று தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தினர். ஒரு இலட்சம் பெறுமதியான காசோலையையும் சைக்கிள் ஒன்றையும் தந்துள்ளனர்.




தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நிதி அன்பளிப்புச் செய்யப்பட்டபோது

* நீர் எங்கிருந்து வருகின்றது?

துருசை (சுலுசு) திறந்துவிட்டவுடன் வாய்க்காலை நிரம்பி மேலதிகமாக வரும் கழிவு நீரில் இருந்துதான் உற்பத்தி செய்யப்படுகின்றது.

* இந்த நீர் ஆண்டு முழுவதும் பெறமுடியுமா?

இல்லை. தற்போது திறந்து விட்ட நீர் பூட்டப்படுமானால் குறைந்தளவு வரும். இதனால் மின் உற்பத்தியும் குறையும். ஆண்டு முழுவதும் பெறலாம். ஆனால் நீர் வீணாகிவிடும்.

* இது போன்று வேறு எங்காவதும் செய்யமுடியுமா?

ஆம்! சிறு மின் உற்பத்தி என்றால் சாதாரணமாக உயரம் தேவையில்லை. 220 வோல்ட் மின்னை ஒரு தனியார் பயன்படுத்தும் அளவுக்கு அந்தந்த இடங்களில் உற்பத்தி செய்ய முடியும். பேராற்றுப் பாலம் உள்ள இடத்தில் நீரைத் தடுத்து தேவையளவு பெறவும் மேலதிகமானால் திறந்து விடவும் இருக்குமாறு கட்டப் பட்டால் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக அதிகளவு மின் உற்பத்தியைப் பெற முடியும். மேலும் அதிகமாக நீர் செல்லும் இடத்தில் உயரம் தேவையில்லை. ஆற்றை ஒடுக்கி வேகம் அதிகரித்த போதும். கிளிநொச்சியைப் பொறுத்தவரை ஐந்தடி வான் அருகே உள்ள பாலத்தினூடாகச் செல்லும் நீர் கரடிப்போக்குச் சந்தியினூடாகக் பாயும் நீர் என்பவற்றில் வைத்து மூன்று கிலோவாற் மின்னைப் பெற முடியும்.

**நேர்காணல்**
**ப. பி. கவியரசன்**
**(ஒட்டுசுட்டான் செய்தியாளர்.)**


*இதன் செயற்பாடு ஆரம்பித்து எவ்வளவு காலமாகிறது.

பெரிய மோட்டர் போட்டு இரண்டு மாதம்தான். ஆனால், சுப்பர்கப் 90பெற்றி மொடல் டயலில் எடுக்கத்தொடங்கி இரண்டு வருடத்திற்கு மேலாகிறது.

* வேறு முயற்சி ஏதாவதும் செய்துள்ளீர்களா?

ஆம்! யுத்தகாலப் பகுதியில் அதாவது 1995 இல் எஸ்லோன் பைப்பை விரித்து நன்னீர் மீன்படகு ஒன்று செய்து கொடுத்துள்ளேன். அதுமட்டுமல்ல. செங்கல் உற்பத்தி போன்ற முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளேன்.

# 180ஆம் நாள் நினைவஞ்சலி



**சு.செல்லமணி**
பிறப்பு:- 05. 08. 1936

**த.சுப்பிரமணியம்**
பிறப்பு:- 15. 06. 1927



**ஜெ.ஜெயமதி**
பிறப்பு:- 24. 09. 1983



**ஜெ.அனுசன்**
பிறப்பு:- 07. 12. 2004



**ஜெ.ஜெயநாக அருச்சுன்**
பிறப்பு:- 21. 02. 1992

**இறப்பு:-26.12.2004**

சுனாமியே சுனாமியே - எமை
சுட்டெரித்த சுனாமியே - நாம்
சும்மா தானே இருந்தோம் - ஏன் நீ
சுழன்றடித்து எமைத் தின்றாய்?
சுக்கு நூறாகியது.எம் இதயம்.

கடற் தாயே கடற் தாயே - உனை
கருணையோடு அன்னை என அன்பாக எமை அழைத்த
கயவனோடு சேர்த்து நீயும் - எமை
கழுத்தறுத்து சென்றதேனோ? - இதை
கடவுளிடம் கூறப்போனால் - நீ
கடவுளரையும் வாரிச் சென்றுவிட்டாய்
கண்ணீரோடு வாழ்க என்றோ
கன்னி நீயும் எண்ணிவிட்டாய்.

அன்னையே நீ அடிக்கடி கூறுவியே
அரை நொடிப்பொழுதில் என்னுயிர் போகும் என்று
அது சுனாமியின் காதுகளுக்கு எட்டி விட்டதோ
அழுது தவிக்கின்றோம் அம்மா
ஆறுதல் கூற வாராயோ?
தந்தையே உன் தயவான வார்த்தைகள்
தற்பொழுதும் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது-அலை
தாவி வந்த சுனாமியோ உனை அழைத்துச் சென்றதேனோ.

ஆண்டவனால் வந்துதித்த அருஞ் சொத்தாம்
அர்ச்சுனையும் அரவணைக்கத் தவறவில்லை.

அன்னையின் குமுறலை அருகில் வந்து பாராயோ
ஆறுமா? எங்கள் மனம் தம்பியே நீ
அப்பாவுடன் சென்றுவிட்டாயோ?
அக்காமார் தவிக்கும் தவிப்பை
அப்பாவிடம் கூறிவிடு.

மங்காத வதனம் கொண்ட மதியே
மறக்க முடியுமா? உன் பிரிவு
மறுபடியும் வருவாயா?
மறந்து விடுவோமா? சுமையுடனே சென்றதனை
மகிழ்ச்சியாக இருந்தோமல்லவா? - நீ ஒரு
மைந்தனைப் பெற்றெடுத்து தருவாயென்று
மனம் பொறுக்கவில்லை அந்த சுனாமிக்கு
மலையாய் எழுந்து வந்து நின்றுவிட்டாள்

அன்பாக அனுசன் என நாமம் இட்டு - உனை
அழைக்க ஆவலுடன் காத்திருக்க
அரக்கன் சுனாமியோ உனை அழித்ததேனோ - உன்
அம்மாவின் குரல் கேட்கிறதா.

அன்புடனே நாம் இரு கரம் கூப்பி கேட்கிறோம்.
அலையே இனியும் பொங்காதே - பொங்கி
எஞ்சியுள்ள எம் உறவுகளைத் தின்னாதே
ஏங்குகின்றோம் உமை நினைத்து - பாவி நாம்
எமை மீண்டும் உறவுகளைப் பிரித்து
பரிதவிக்க வைக்காதே.

26-12-2004 அன்று ஆழிப்பேரலையின் பிடியில் உயிர் நீத்த எமது குடும்பத்தினரின் 180ஆம் நாள் நினைவு நிகழ்வு 23-06-2005 (இன்று) நடைபெறவுள்ளதால் இந்நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

கொக்குளாய் வீதி,
ஆழியவளை.

தகவல்:-
குடும்பத்தினர்

(6291)

# இந்தியாவின் நம்பிக்கையை பாகிஸ்தான் இழந்து விட்டது

## -இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் குற்றச்சாட்டு

(புதுடில்லி)

ஹுரியத் தலைவர்களை பாகிஸ்தானுக்குள் அனுமதித்ததன் மூலம் இந்தியாவுடனான ஒத்துழைப்பு, புரிந்துகொண்டதன்மை, நம்பிக்கை எல்லாவற்றையும் பாகிஸ்தான் இழந்து விட்டது. அத்துடன் காஷ்மீர் பிரச்சினையில் பாக்.அதிபர் பர்வேஷ் முஷாரப் கூறியிருப்பதைப் போல் “மூன்றாவது நபர்” தலையீட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பிரதமர் மன்மோகன்சிங் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

காஷ்மீர் பிரிவினவாதத்தை ஆதரிக்கும் ஹுரியத் தலைவர்கள் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணித்தலைவர் யாசின்மாலிக் உட்பட ஒன்பது பேர் சமீபத்தில் பாகிஸ்தான் பயணம் மேற்கொண்டனர். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதி வரைக்கும் சென்று வர ஹுரியத் தலைவர்களுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியது. ஆனால் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இருந்து பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் வரை ஹுரியத் தலைவர்கள் சென்று வந்தனர். அவர்களுக்கு கடவுச்சீட்டு எதுவும் இல்லை.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. “பாகிஸ்தான் விடயத்தை மத்தியரசு தவறாகக் கையாள்கிறது. மத்திய அரசின் கொள்கை தவறானது என்று முன்னாள் பிரதமர் வாஜ்பாய் எதிர்ப்புத் தெரிவித்தார். அத்துடன் கடந்த 15ஆம் திகதி பிரதமர் மன்மோகன்சிங்குக்கு வாஜ்பாய் கடிதம் எழுதினார். அந்தக்கடிதத்துக்குப் பிரதமர் மன்மோகன்சிங் அனுப்பிய பதில் கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்தார்.

# முன்னாள் எம்.பி படுகொலை வழக்கில் உத்தரப்பிரதேச முன்னாள் அமைச்சரும் மகனும் கைது

(புதுடில்லி)

பா.ஜ முன்னாள் எம்.பியையும் அவரது சாரதியையும் கொலை செய்த வழக்கில் உத்தரப் பிரதேச முன்னாள் அமைச்சரும், அவரது மகனும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

இது குறித்து கோரக்பூர் பொலிஸ் அதிகாரி பி.பிபாக்சி கூறியதாவது:-

பா.ஜ கட்சியைச்சேர்ந்த முன்னாள் எம்.பி லட்சுமி நரேன் மணி திரிபாதி இவரது சாரதி நந்து இவர்கள் இருவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கொலை செய்யப்பட்டனர்.

திரிபாதியின் வீட்டிற்கு வந்த இருவர் அவரைத் திருமண விழாவிற்கு வரவேண்டும் என அழைப்பு விடுத்தனர். திரிபாதியின் வீட்டில் கொடுக்கப்பட்ட இனிப்பை சாப்பிட்டு விட்டு இருவரும் பின்னர் திரிபாதியையும் அவரின் சாரதியையும் சுட்டுக் கொன்றனர்.

இந்தக் கொலை தொடர்பாக உத்தரப் பிரதேச முன்னாள் அமைச்சர் மார்க்கண்டே சந்தும் அவரது மகன் சி.பி.சந்தும் கைது செய்யப்பட்டனர். மார்க்கண்டே சந்த் உத்தரப் பிரதேசத்தில் ராஜ்நாத்சிங் முதல்வராக இருந்த போது அமைச்சராக இருந்தவர். கொலை செய்யப்பட்ட திரிபாதியின் மனைவி சந்திரகாந்தி கோரக்பூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் அவர்கள் இருவரையும் பொலிசார் கைது செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தனர். பின்னர் இருவரும் விசாரணைக்காக லக்னோ காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டனர். நிலக்கரி ஒப்பந்தம் எடுப்பது தொடர்பாக ஏற்பட்ட மோதலே கொலைக்கு காரணமாக இருக்கலாம் எனத் தெரிகிறது என்றும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

# விமானப்படை உலங்குவானூர்தி நிலத்தில்மோதி நொருங்கியது

## ——17பேர் காயம்

காஷ்மீர் பூஞ்ச் மாவட்டத்தில் இந்திய விமானப்படை உலங்குவானூர்தி ஒன்று நிலத்தில் மோதி நொருங்கியதில் 15 இராணுவத்தினர் உட்பட 17 பேர் காயமடைந்தனர்.

இது குறித்து இராணுவ அதிகாரிகள் தெரிவிக்கையில்;

விமானப்படைக்கு சொந்தமான எம்ஜ-17 ரக உலங்குவானூர்தி ஒன்று 15 இராணுவத்தினர் இரண்டு பணியாட்கள் மற்றும் ஓட்டிகளுடன் பூஞ்ச் மாவட்டம் ஜோராவாலி காலி பகுதியில் இருந்து தேராவாலிகாலி பகுதிக்கு சென்று கொண்டிருந்தது. தீவிரவாதிகள் ஊடுருவலைத் தடுப்பதற்காக இராணுவ வீரர்களை இறக்கி விடுவதற்காக சென்று கொண்டிருந்தது காலை 10 மணிக்கு புறப்பட்ட உலங்குவானூர்தி 10.10 மணி அளவில் விபத்துக்கு உள்ளானது. தரையில் மோதிய உலங்குவானூர்தி மூன்றாக உடைந்து பின்னர் பள்ளத்தில் உருண்டு விழுந்து தீப்பிடித்தது. ஆனாலும் ஓட்டியும் துணை ஓட்டியும் காயமின்றித் தப்பினர் இரண்டு பணியாட்கள், அனைவரும் வெளியில் குதித்து தப்பித்த போது 17 பேர் பாதிக்கப்பட்டனர் எனத் தெரிவித்தார்.

# கேரளாவில் கனமழை இரண்டுபேர் பலி

(திருவனந்தபுரம்)

கேரளாவில் பெய்து வரும் கனமழையால் இரண்டு பேர் இறந்தனர். நூற்றுக்கணக்கான வீடுகள் கடல் கொந்தளிப்பில் சிக்கி சேதமடைந்தன.

கேரளாவில் இப்போது பருவமழை பெய்து வருகிறது. பல பகுதிகளிலும் கனமழை பெய்கிறது. கோட்டயம், கண்ணூர் பகுதிகளில் தலா ஒருவர் மழைக்கு பலியாயினர்.

# திருமண வீடு இடிந்து வீழ்ந்து காஷ்மீரில் 30 பேர் காயம்

(சிறிநகர்)

காஷ்மீரில் திருமணம் நடக்க இருந்த வீடு இடிந்து வீழ்ந்ததில் மணமக்கள் உட்பட 30 பேர் பலத்த காயமடைந்துள்ளனர். இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது; அண்மையில் நடந்த திருமண நிகழ்ச்சியில் உறவினர்கள் அதிகமானோர் கலந்து கொண்டனர். வீட்டின் முதல் தளத்தில் உறவினர்கள் ஆடியும் பாடியும் மகிழ்ச்சியாக இருந்தனர். அப்பொழுது வீட்டின் முதல் தளத்தின் கூரை திடீரென சரிந்து வீழ்ந்தது உடன் ஏனைய சுவர்களும் இடிந்து வீழ்ந்தன. இதனால் மணமக்கள் உட்பட பலர் இடிபாடுகளில் சிக்கினர். பின்னர் உள்ளூர் மக்களால் அவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

# இந்து மக்கள் கட்சியின் மாநிலத்தலைவர் கொலை



மதுரையில் இந்து மக்கள் கட்சி மாநிலதுணைத்தலைவர்காளிதாசனை இரண்டு மர்மநபர்கள் ஓடஓடவிரட்டி வெட்டிக்கொன்றனர். மதரீதியான அல்லது முன்விரோதம் காரணமாக கொலை நடந்திருக்கலாமென விசாரணை நடத்தி வரும் பொலிசார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

# திக்குத் தெரியாத நிர்வாகம்; ராம்நாயக் கடும் விமர்சனம்

(புதுடில்லி)

பெற்றோல் டீசல் விலை உயர்த்தப்பட்டிருப்பது திக்குத் தெரியாத நிர்வாகத்திற்கு சிறந்த உதாரணம் என்று பெற்றோலியத் துறை முன்னாள் அமைச்சர் ராம்நாயக் கண்டித்தார்.

இது தொடர்பாக ராம்நாயக் வெளியிட்ட அறிக்கையில் பெற்றோலியப் பொருட்களின் விலையை உயர்த்தும் முன் புதிய விலைக் கொள்கையை உருவாக்குவோம் என்று பெற்றோலிய அமைச்சர் மணி சங்கர்ஐயர் கூறினார். அவருடைய பேச்சுகாற்றோடு போய் விட்டது. பெற்றோல் டீசல் விலை உயர்த்தப்பட்டுள்ளது. திக்குத் தெரியாத நிர்வாகத்திற்கும் சர்வதேச சந்தையில் விலை உயர்ந்தால் இங்கும் விலை உயர்த்த வேணடும் என்ற அரசின் நிலைகக்கும் இது சிறந்த உதாரணம். பெற்றோல் டீசல் மீதான கலால் மற்றும் சுங்க வரியை வாஜ்பாய் ஆட்சியின் போது இரண்டு சதவீதம் குறைத்தோம் அதன் மூலம் மக்கள் மீதான சுமையும் குறைந்தது. இது போன்ற நடவடிக்கையை ஏன் எடுக்கவில்லை என்பதை பிரதமர் மன்மோகன்சிங் விளக்கவேண்டும்

கடந்த ஓராண்டில் சமயல் எரிவாயு விலையை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இரண்டு முறை உயர்த்தியுள்ளது. இப்போது பெற்றோல் டீசல் விலையை உயர்த்தியதன் மூலம் நடுத்தர மக்களின் நலனில் அக்கறை காட்டுவதாக கூறுவதை இன்னும் நம்ப வேண்டும் என்று மணிசங்கர் ஐயர் நினைக்கின்றாரா?

விலை உயர்வை எதிர்த்து நாடு தழுவிய போராட்டம் நடத்தப் போவதாக கம்யூனிஸ்ட் கட்சிகள் அறிவித்துள்ளன. ஐக்கிய முற்போக்கு ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் விலை உயர்விற்கு பச்சைக்கொடி காட்டி விட்டு மக்களிடையே சிவப்புக் கொடியைக் காட்டி கம்யூனிஸ்ட்டுக்கள் நாடகமாடுகின்றன. அதற்குப் பதில், மக்கள் விரோத நடவடிக்கையைக் கண்டித்து அரசுக்கு அளிக்கும் ஆதரவை அரசியல் நேர்மையுடன் வாபஸ் பெறவேண்டும். என அறிக்கையில் ராம்நாயக் கூறியுள்ளார்.

# புகையிரத விபத்து 24 பேர் காயம்

(புதுடில்லி)

டில்லியில் இருந்து பூரி நோக்கி சென்று கொண்டிருந்த புருஷோத்தம் விரைவு புகையிரதம் நின்று கொண்டிருந்த புகையிரத இயந்திரம் மீது மோதி தடம் ரண்டது. இதில் 24 பேர் பலத்த காயமடைந்தனர்.


# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## பயணியர் பார்வைக்கு

மக்களின் வேண்டுகைக்கு அமைவாக 25.06.2005 ஆம் நாளிலிருந்து வலைப்பாடு–கிளிநொச்சி பேருந்துப்பணி, பொன்னாவெளி கிராமம் சென்று வரும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு

### வலைப்பாடு - பொன்னாவெளி - கிளிநொச்சி

| | வலைப்பாடு | கிராஞ்சி | வேரவில் | பொன்னாவெளி | 12ஆம் கட்டை | பள்ளிக்குடா | பூநகரி | தம்பிராய்ச்சந்தி | நல்லூர் | பரந்தன் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை | 06.00 | 06.40 | 06.50 | 07.05 | 07.35 | 08.35 | 08.40 | 08.55 | 09.10 | 09.55 | 10.15 |

### கிளிநொச்சி - பொன்னாவெளி - வலைப்பாடு

| | கிளிநொச்சி | பரந்தன் | நல்லூர் | தம்பிராய்ச்சந்தி | பூநகரி | பள்ளிக்குடா | 12ஆம் கட்டை | பொன்னாவெளி | வேரவில் | கிராஞ்சி | வலைப்பாடு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாலை | 03.30 | 03.50 | 04.35 | 04.50 | 05.05 | 05.10 | 06.10 | 06.40 | 06.55 | 07.05 | 07.45 |

முகாமையாளர்
பேருந்துப்பகுதி
கிளிநொச்சி.

(சி-12227)

# முக்கோண போட்டியில் கொலிங்வூட் அபாரம்; இங்கிலாந்து அணிக்கு மூன்றாவது வெற்றி




நேற்று முன்தினம் இங்கிலாந்தின் ட்ரன் பிறிஜில் நடைபெற்ற நட்வெஸ்ட் கிண்ணத்துக்கான முக்கோணக் கிரிக்கெட் தொடரில் பங்களாதேஷ் அணியுடனான போட்டியில் ஆட்டமிழக்காது 112 ஓட்டங்களையும், ஆறு விக்கெட்டுக்களையும் பெற்ற இங்கிலாந்து சகல துறைவீர் போல் கொலிங்வூட் சிறந்த ஆட்டநாயகன் என்ற விருதை பெற்ற முதல் இங்கிலாந்துவீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

கெலிங்வூட், மற்றும் அதிரடி வீரரான அன்ருஸ் ரோசுடன் இணைந்து 210 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். ரெஸ்கொதிக் 85 ஓட்டங்களைப் பெற்றார். இதனால் இங்கிலாந்து 50 ஓவர் முடிவில் நான்கு விக்கெட் இழப்புக்கு391 ஓட்டங்களைக் குவித்தது. இது சர்வதேச ஒருநாள் போட்டியில் பெற்ற அதிகபட்ச ஓட்டங்களில் இரண்டாவது இடத்தைப்பிடித்தது. ஸ்ரோஸ் 152 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழந்தார்.



பந்துவீச்சில் பங்களாதேஷ் அணியின் நஸ்முல் ஹுசைன் 83 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும், அப்ராப் அகமட் 65 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். மைக்கல் வோன் ஓட்டம் பெறாத நிலையில் ஹுசைனின் பந்துவீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.



பதிலுக்கு 392 என்ற பாரிய வெற்றியிலக்கு நோக்கி ஆடிய பங்களாதேஷ் கொலிங்வூட், ட்ரம்லெட் ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சில் 45.2 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 223 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.அவுஸ்திரேலியாவுடனான போட்டியில் சதமடித்த அஷ்ரபுல் 52 பந்துகளைச்சந்தித்தது 94 ஓட்டங்களைப் பெற்றார். ஜாவிட் ஒமர் 59ஓட்டங்களைப் பெற்றார். அப்ராப் அகமட் கொலிங்வூட் வீசிய முதல் பந்தில் ஆட்டமிழந்தார். பந்துவீச்சில் கொலிங்வூட் பத்து ஓவர் பந்துவீசி 31 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களையும், ட்ரம்லட் 8.2 ஓவர் பந்துவீசி 32 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடரின் மேலும் ஒருலீக் ஆட்டத்தில் இங்கிலாந்து அவுஸதிரேலிய அணிகள் இன்று மோதுகின்றன.

## சாதனை வெற்றிபெற்ற வங்களாதேசுக்கு அவுஸ்திரேலியப் பிரதமர் பாராட்டு



உலக சம்பியன் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி சாதனை வெற்றிபெற்ற பங்களாதேச அணிக்கு அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவாட் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடந்து வரும் மூன்று நாடுகள் ஒரு நாள் கிரிக்கெட்போட்டியின் இரண்டாவது ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

உலக சம்பியனான அவுஸ்திரேலியாவை ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேச அணி வீழ்த்தி அனைவரையும் அதிசயிக்க வைத்தது.

இந்த நிலையில் அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவாட்டும் வங்களாதேச அணியைப் பாராட்டியுள்ளார். அவுஸ்திரேலியாவுக்கான பங்களாதேச தூதரக அதிகாரி ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் இந்த வாழ்த்தை அவுஸ்திரேலிய பிரதமர் தெரிவித்துள்ளார். தீவிர கிரிக்கெட் ஆர்வலரான ஜோன் ஹவாட் தனது வாழ்த்துக்களை பங்களாதேச பிரதமர் கலிதாஜியாவுக்குத் தெரிவிக்கும்படி கூறியுள்ளார்.




# ஷேன் வோர்ன் மீது நடவடிக்கை இல்லை



பாலியல் புகார் தொடர்பாக வோர்ன் மீது நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என அவுஸ்திரேலிய கிரிக்கெட் நிர்வாகம் அறிவித்துள்ளது. இது அவரது தனிப்பட்ட விவகாரம் என விளக்கம் அளித்துள்ளது.


இங்கிலாந்து வந்த அவுஸ்திரேலிய அணிக்கு சோதனை மேல் சோதனை. வங்கதேசம் உட்பட வரிசையாக நான்கு போட்டிகளில் தோற்றது. சைமண்ட்ஸ் மது அருந்திய பிரச்சினையில் சிக்கி இரண்டு போட்டித் தடையைச் சந்தித்தார். மற்றொரு வீரரான வோர்ன் பாலியல் புகாரில் மாட்டினார். இவர் தன்னுடன் பாலியல் உறவு வைத்துக் கொண்டதாக லண்டனைச் சேர்ந்த லாரா சேயர்ஸ் என்ற 25 வயதுப் பெண்மணி கூறினார். இந்தச் செய்தியை இங்கிலாந்தின் பத்திரிகைகள் வெளியிட்டு சர்ச்சையை கிளப்பின. ஏற்கனவே பெண்கள் விடயத்தில் பலமுறை மாட்டிக் கொண்ட வோர்ன். மீண்டும் ஒரு புகாரில் சிக்கி பிரச்சினை பெரிதானது. இவ்விடயத்தில் இவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

தனிப்பட்ட வாழ்க்கை சம்பந்தப்பட்டது. இதை அவரது குடும்பம்தான் கவனித்துக் கொள்ள வேண்டும். அணிக்கு எவ்வித தொடர்பும் இல்லை. களத்திற்கு வெளியே வோர்ன் தொடர்பான விடயங்கள் கவலை அளிக்கின்றன. ஆனாலும் தனிப்பட்ட வாழ்க்கை என்ற எல்லை இருப்பதால் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இல்லை. தவிர அவுஸ்திரேலிய அணியிலும் அவர் இல்லை. (ஒரு நாள் தொடருக்கான அணியில் வோர்ன் இடம் பெறவில்லை என்பதால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இல்லை. சைமண்ட்ஸ் விவகாரத்தில் தலைவர் பொண்டிங் எடுத்த முடிவு (2 போட்டி தடை) தவிர்க்க முடியாதது என்றார்.

# கிரிக்கெட்டில் மாற்றம் ஐ.சி.சி .கூட்டத்தில் முடிவு

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) வருடாந்தக்கூட்டம் வரும் 24 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை லண்டனில் நடக்கிறது.

இந்தக் கூட்டத்தின்போது கிரிக்கெட் ஆட்டத்தில் மாற்றம் ஏற்படுத்துவது குறித்து முடிவுகள் எடுக்கபடவுள்ளன. அதாவது, தற்போது கிரிக்கெட் ஆட்டத்தைத் துரிதப்படுத்தும் விதத்தில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காக 20 ஓவர்கள் கொண்ட போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் முதல் 15 ஓவர்கள் களத்தடுப்பு முறையைத் தளர்த்துவது குறித்தும் அந்தக் கூட்டத்தின்போது விவாதிக்கப்படவுள்ளன. இதுமட்டுமல்லாமல் ஆட்டப் போக்கைத் துரிதப்படுத்த வேறு என்ன என்ன வழிகள் உள்ளன என்பது குறித்தும் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.



லண்டனில் நடந்த விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் பெல்ஜிய வீராங்கனை கிம் கிளைஸ்டர்ஸ் 6-2, 6-3 என்ற செட்களில் பிரிட்டன் வீராங்கனை கோடீயே ஓ பிரயனை வீழ்த்தினார். (அடுத்த படம்) ஆண்கள் பிரிவில் நடந்த முதல் சுற்றில் தாய்லாந்து வீரர் பாரடான் ஸ்ரீசாய்பன்2-6, 4-6,4-6 என்ற நேர்செட்களில் ரஷ்ய வீரர் மரட்சபினிடம் தோல்வியைத் தழுவினார். தோற்றாலும், ரசிகர்களுக்கு வணக்கம் செலுத்தி விடைபெறுகிறார் சாய்பன்

## டெண்டுல்கரின் மாயாஜாலம் முடிந்துவிட்டது கபில்தேவ் பகிரங்கமாக தெரிவிப்பு



டெண்டுல்கரின் துடுப்பாட்ட மாயாஜாலம் முடிந்துவிட்டது. 32 வயதான அவரை அணியிலிருந்து ஒதுக்கி வைப்பதற்கு முன்னதாக டெண்டுல்கரே ஓய்வு பெறுவது நல்லது. கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதும், தொடர்ந்து ஆடுவது குறித்தும் அவரே முடிவு செய்யவேண்டும். டெண்டுல்கர் ஒரு தலைசிறந்த வீரர். இவ்வாறு கபில்தேவ் கூறினார்.

அணித்தலைவர் கங்குலியின் ஓய்வு பற்றி கபில்தேவிடம் கேட்பதற்கு, கங்குலி பற்றிய முடிவை தேர்வுக் குழுவின்தான் முடிவு செய்ய வேண்டும் என்று பிடிகொடுக்காத வண்ணம் பதிலளித்தார்.

# ஜஸ்டின் ஹெனின் அதிர்ச்சி தோல்வி வீனஸ் சகோதரிகள் முன்னேற்றம்

கிராண்ட்ஸ்லாம் பட்டங்களில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி இங்கிலாந்து விம்பிள்டன் நகரில் நடந்து வருகிறது.

இதில் முதல் சுற்றுப்போட்டிகள் தற்போது நடந்து வருகின்றன. அமெரிக்காவின் இரட்டை சகோதரிகளான வீனஸ் வில்லியம்ஸ், செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் நேற்று முன்தினம் போட்டியில் பங்கேற்றனர்.

வீனஸ் வில்லியம்ஸ் செக் குடியரசைச் சேர்ந்த பிர்னெரவாவை 6-2,6-4 என்ற நேர்செட்டில் வீழ்த்தினார். செரீனா வில்லியம்ஸ் சக நாட்டைச் சேர்ந்த ஏஞ்சலாவை 6-7, (12-14), 6-4, 6-2 என்ற செட்டில் வீழ்த்தினார்.

விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட வீராங்கனைகளில் ஒருவர் பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்டின் ஹெனின், பிரெஞ் ஓப்பன் சம்பியன் பட்டத்தை வென்ற கையோடு அவர் இந்தப் போட்டியில் பங்கேற்க வந்திருந்தார். முதல் சுற்றில் அவர் கிரீஸ் நாட்டை சேர்ந்த எலினிடேனிலிடோவை எதிர்கொண்டார். எலினி உலக தர வரிசை பட்டியலில் 76 ஆவது இடத்தில் இருப்பவர்.

முதல் ஆட்டத்திலேயே ஜஸ்டின் ஹெனின் தடுமாறினார். 7-6, (10-8)என்ற புள்ளிகளில் முதல் சுற்றை எலினி கைப்பற்றினார். பின்னர் சுதாகரித்துக்கொண்டஹெனின் 6-2 என்ற புள்ளிகளில் இரண்டாவது சுற்றை கைப்பற்றிக் கொண்டார்.


ஆனால் மூன்றாவது சுற்றில் எலினி ஆக்ரோஷமாக ஆடி 7-5 என்ற புள்ளிகளில் வென்றார். இதன் மூலம் எலினி 7-6,2-6,7-5 என்ற செட்களில் வெற்றிபெற்றார். பிரெஞ்ஓபன் சம்பியன் ஹெனில் முதல் சுற்றிலேயே வெளியேறியது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.



உலகின் இரண்டாம்நிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியாஷரபோவா ஸ்பெயினைச் சேர்ந்த மரியாவை6-2 6-2 என்ற நேர் செட்டில் வென்று இரண்டாவது சுற்றிற்கு தகுதி பெற்றார். அது போல முன்னணி வீராங்கனைகளான நாடியா பெற்ரோவா, மேரிபியர்ஸ் ஆகியோரும் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

ஆண்கள் பிரிவில் முன்னணி வீர்களான அண்டிரொடிக், ஹென்மென், ரபேல் நடால்,டேவிட் நல்பாண்டியன் ஆகியோர் முதல் சுற்றில் வெற்றி பெற்றனர்.

## சிந்தனைக்கு



தன்னிறைவான பொருளாதாரம் எமது தேசியவாழ்வுக்கு மூலாதார மானது; தனியரசு நிர்வாகத்திற்கு அத்திவாரமானது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 23-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## தேவைகளில் ஒன்று!

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகம், பிரதேசசபை ஆகியவற்றின் புதிய கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. யுத்தத்தால் முற்றாக அழிந்து போயுள்ள கிளிநொச்சி நகரின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும், புதுப்பொலிவிற்கும் இவ்வாறான கட்டடநிர்மாணங்கள் அவசியமானவையாகும். அதாவது கிளிநொச்சி நகர மக்களுக்கான முழு அளவிலான சேவையை வழங்கவும், அழிந்த நகரம் புதுப் பொலிவுபெறவும் இவை தேவையாகிறது.

ஒரு நகரின் விருத்திக்கு போக்குவரத்துவலைப்பின்னல், நீர் வழங்கல், மின்சாரவிநியோகம் , தொலைத்தொடர்பு வசதிகள் என்பன எவ்வாறு அடிப்படையாக அமைகின்றதோ அதே போன்றே கட்டடநிர்மாணமும் அவசியமானவையாகும். இந்தவகையில் கிளிநொச்சியில் அரச கட்டடங்கள், த்னியார் கட்டடங்கள் ஆகிய இரண்டுமே விரைவில் நிர்மாணிக்கப்பட வேண்டியவையாகவுள்ளன.

அழிந்து போன நகரையும், பிரதேசத்தையும் மீளக் கட்டி எழுப்புவதற்கு சேவையாற்ற வேண்டிய அரசதிணைக் களக்கட்டடங்கள் விரைவில் செய்து முடிக்கப்பட வேண்டியவை ஆகின்றன. அவ்வாறு முடிக்கப்படும் பட்சத்திலேயே மக்களுக்கான சேவைகளை வழங்குவதற்கான வசதிகள் எற்படக் கூடியவையாக இருக்கும். அத்தோடு அதற்குரிய பணியாளர்களும் சேவைகளை வழங்க முன்வரக்கூடும். வசதியீனங்களைக் கூட்டி சேவை நடவடிக்கைகளை ஓரம் தள்ளுவது தவிர்க்கப்படும்.

இதேவேளை யுத்தம் காரணமாக கிளிநொச்சி நகரில் மட்டும் இருந்த கட்டடங்கள், குடியிருப்புக்கள் அழிவுறவில்லை பிரதான வீதியை (ஏ–9) மையமாகக் கொண்டு இரு பக்கங்களிலும் சுமார் ஐந்து கிலோ மீற்றர் வரையிலான தூரத்திற்கு இருந்த குடியிருப்புக்கள் கூட முற்றாக அழிக்கப்பட்டும், சேதமாக்கப்பட்டும் இருந்தன.

இந்நிலையில் தற்பொழுது கிளிநொச்சி நகரிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் உள்ள முக்கியமான பிரச்சினை குடியிருப்புப் பிரச்சினை ஆகும். இப்பிரச்சினையால் நிரந்தரமாக கிளிநொச்சி நகரில் குடியிருப்பவர்களும் சரி, வெளியில் இருந்து வந்து கிளிநொச்சி நகரில் தங்குபவர்களும் சரி பெரும் நெருக்கடிகளை எதிர் கொள்ள வேண்டியவர்களாகவே உள்ளனர்.

நாம் அறிந்தவரையில் பல அரச ஊழியர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிவோர் கிளிநொச்சி நகரில் தங்குமிடம் தேடி அலைந்து தோல்வியுற்று தமது கடமைகளை/சேவையினை முழு அளவில் ஆற்ற முடியாத நிலையில் உள்ளனர் இதனால் பலர் தமது சேவைகளை ஆற்ற முடியாது வெளியேறியும் உள்ளனர்..

மேலும் கிளிநொச்சி நகரில் பணிபுரிய சேவையாற்ற வருபவர்கள் தங்குமிடங்களுக்காகப் பெருமளவு பணத்தை வாடகையாகச் செலுத்தும் நிலையும் காணப்படுகின்றது. அத்தோடு ஒரு தரப்பினர் செலுத்தத்தயாராகவும் உள்ளனர். ஆயினும் தேவைக்கேற்ற அளவில் குடியிருப்புக்கள் கிடைக்கப்பெறுவதாகஇல்லை.

இதேவேளை கிளிநொச்சி நகரின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஓரளவு வர்த்தக நிலையங்கள் உருவாக்கம் பெற்றுள்ளன என்றே கூறலாம். அத்தோடு வர்த்தகமையங்களை நிறுவுவதில் கூடுதலான ஆர்வம் காணப்பட்டு வருகின்றது. இதனால் முழு அளவில் இல்லாது விடிலும் கணிசமான அளவில் வர்த்தகத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டவை ஆகியுள்ளன.

ஆனால் இதே அக்கறை, கரிசனை குடியிருப்புக்களில் செலுத்தப்படுவதாக இல்லை இதற்கு வர்த்தக துறை மட்டுமே வருமானம் ஈட்டும் துறையாகவும் பலர் மதிப்பீடு செய்துள்ளமை காரணமாக இருக்கலாம். ஆனால் இன்று கிளிநொச்சி நகரில் புதிய குடியிருப்புக்களை நிர்மாணித்தலும் வருமானம் ஈட்டும் ஒரு முயற்சியாகக் கொள்ளத்தக்கதாகவே உள்ளது.

இதேசமயம் வீதிப் புனருத்தானமோ, மின்சார விநியோகமோ அன்றி தொடர்பு சாதன வசதிகளை வழங்குதலோ தனி நபர்களால் இயலக் கூடிய காரியமல்ல. அவற்றில் அரசாங்கம் அன்றி அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றாலேயே மேற்கொள்ளப்படத்தக்கவையாகும் ஆனால் வீடுகளை அமைத்தல் என்பது தனி மனிதர்களினால் மேற்கொள்ளப்படத்தக்கதே.

இந்நிலையில் கிளிநொச்சி நகரில் புதிய குடியிருப்புக்கள் அமைக்கப்படுவதில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இது கிளிநொச்சி நகரப் பகுதி புதுப்பொலிவு பெறுவதற்கு மட்டுமல்ல கிளிநொச்சி நகருக்குத் தேவையான சேவைவழங்கலுக்கும் அவசியமானதாகும் இதனை தமது வாழ்விற்கான குடியிருப்புகளை அமைத்தல் என்பதாக மட்டுமல்லாது ஒரு பொருளாதார முயற்சியாகவும் மேற்கொள்ள முதலீட்டாளர்கள் முன் வருதல்வேண்டும்.

அத்தோடு தனியாக கிளிநொச்சி வாழ் மக்கள் மட்டுமல்ல கிளிநொச்சிக்கு வெளியில் வாழும் பொருளாதார வசதியுள்ளவர்களும் இதனைஓர் முதலீட்டு நடவடிக்கைபோன்று மேற்கொள்ள முடியும். இது தனிப்பட்ட ரீதியில் வீட்டின் உரிமையாளர்களுக்கும் பொதுவில் நகரின் அபிவிருத்திக்கும் நன்மைஅளிப்பதாக இருக்கும்.

# சனாதிபதி வேட்பாளரை நியமிப்பதில் சுதந்திரக்கட்சிக்குள் கருத்துமுரண்பாடு

### –சந்திரிகாவின் தீர்மானத்திற்கு எதிர்ப்பு

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்துவதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும், சனாதிபதிக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன.

எதிர்வரும் சனாதிபதித்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சனாதிபதி வேட்பாளராக அநுரா பண்டார நாயக்கவை நிறுத்துவதென சனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளதாக சனாதிபதி காரியாலயம் தெரிவித்துள்ளது. இது சம்பந்தமாக சிரேஷ்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களோடு கலந்தாலோசித்துள்ளார் என செய்திகள் வெளிவந்துள்ளது. இதே நேரத்தில் மகிந்த ராஜபக்ஷவை சனாதிபதி வேட்பாளராக நிறுத்த வேண்டுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் சனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அநுரா பண்டார நாயக்கவை சனாதிபதி வேட்பாளராக நிறுத்தினால் கட்சியில் பல கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதுடன் கட்சிக்கு பின்னடைவுகள் ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மற்றும் அரசில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சனாதிபதி வேட்பாளராக நிறுத்த வேண்டும் என சனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதேவேளை எதிர்வரும் சனாதிபதித்தேர்தலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை நிறுத்துவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்களுடன் மங்கள சமரவீர கலந்தாலோசனை செய்துள்ளார் என்றும் அப்பொறுப்பினை தாம் ஏற்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் அநுரா பண்டாரநாயக்கவை பிரதமராக்குவதற்கன முயற்சிகளையும் மங்கள சமரவீர மேற்கொண்டுள்ளார் என செய்திகள் வெளிவந்துள்ளன.

சீன நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டம் ஒன்றில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். இக்கூட்டத்தில் அநுரா பண்டாரநாயக்கவை சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பிரதமராக ஏற்கவேண்டும் என பிரேரணை ஒன்றை முன்வைத்துள்ளார்.

# மேல்மாகாண முதலமைச்சர் நியமனம் சு.கவுக்கு ஜே.வி.பி ஆதரவளிக்கும்;

### ~திட்டமானமுடிவுகளின்றி கூட்டம் நிறைவு

மேல்மாகாண சபையின் முதலமைச்சர் நியமனம் தொடர்பில் நேற்று நடைபெற்ற கூட்டம் முடிவெதுவும் எட்டப்படாத நிலையில் முடிவுற்றது.

அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி. விலகியதையடுத்து மாகாண சபைகளிலும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் எதிர்த்தரப்பு ஆசனங்களிலேயே அமர்வதென முடிவுசெய்தனர்.

இந்நிலையில் கடந்த ஞாயிறன்று மேல்மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த றொஜினேல்ட்கூரே தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

முதலமைச்சரை நியமிப்பதற்கு மாகாணசபையில் எந்தக்கட்சிக்கு பெரும்பான்மை உள்ளது என்பது குறித்து முடிவு செய்வதற்காகவே ஆளுநர்அலாபி மௌலானா தலைமையில் விசேடகூட்டம் ஒன்று நடைபெற்றது.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சி தனக்கே பெரும்பான்மை இருப்பதாகத்தெரிவித்தது. எனினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தங்களின் கட்சியின் சார்பில் நந்தன மெண்டிசின் பெயரை முதலமைச்சர் பதவிக்கு சிபாரிசுசெய்வதாகத் தெரிவித்தது.

அதற்கு ஜே.வி.பி உறுப்பினர்களும் தங்களின்ஆதரவை தெரிவித்துள்ளனர். எனினும் அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியினரும் சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ் உறுப்பினர்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மேல்மாகாண சபை உறுப்பினர்களின் குழுத்தலைவர் கித்சிறி கஹட்டபிட்டியின் பெயரை சிபாரிசு செய்ய அக்கட்சி தீமர்னித்திருந்தது. இது தொடர்பில் சத்தியக்கடதாசி ஒன்றை வழங்கியுள்ளதாக கித்சிறி கஹட்டப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

எனினும் முதற்கட்டம் பெரும்பான்மையை அறிந்து கொள்வதென்றும் இரண்டாம் கட்டத்தில் அவர் சத்தியக்கடதாசி வழங்கலாம் என்றும் தெரிவித்த ஆளுநர் இந்தக் கூட்டம் பெரும்பான்மை யாருக்கு என்று அறிந்து கொள்வதற்காக நடத்தப்பட்டது என்றும் கூறியுள்ளார்.

மேல் மாகாண சபையில் எழுந்துள்ள நெருக்கடி நிலை குறித்து நேற்று முன்தினம் ஜே.வி.பி தலைவர்களுக்கும் துறைமுக சேவைகள் அமைச்சர் மங்கள சமரவீரவிற்கும் இடையே நடைபெற்ற விசேட சந்திப்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் முன்மொழியப்படவுள்ளவருக்கு ஜே.வி.பி யின் ஆதரவு வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஒரு வருட காலத்திற்கு நந்தன மெண்டிஸ்சுக்கு ஆதரவு வழங்குவதற்கு ஜே.வி.பி யினர், அங்கு இணங்கியுள்ளனர்.

# அநுராவின் கருத்துக்களுக்கு மௌனமே பதிலாகும்

### -ஜே.வி.பி. அறிவிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைக் கட்டியெழுப்பப் பாடுபட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான அநுரா பண்டாரநாயக்க கூறியிருக்கும் கருத்துக்களுக்கு எமது பதில் மௌனமே என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை உருவாக்கப் பாடுபட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான அநுர பண்டாரநாயக்க கூறியிருக்கும் கருத்துக்கள் தொடர்பாக பதில் என்ன? ஜே.வி.பி யின் நிலைப்பாடு என்ன? என்று கேட்கப் பட்டபோதே விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை உருவாக்க அநுரா பண்டாரநாயக்க மிகவும் பாடுபட்டார் என்றும்அதற்குக்கௌரவம் அளிக்கும் முகமாக அவர் கூறியிருக்கும் கருத்துக்கள் குறித்து தமது கட்சி எதுவித பதிலையும் அளிக்க விரும்பவில்லை. என விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

# சிவராம் கொலைச்சந்தேகநபரை அடையாள அணிவகுப்புக்குட்படுத்த பணிப்பு

(கொழும்பு)

பிரபல ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமின் கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 27ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. கடுவெல நீதிமன்ற நீதிபதி சம்பா ஜானகி ராஜரட்ன இதற்கான உத்தரவினைப் பிறப்பித்துள்ளார். இந்தக் கொலை தொடர்பான இரண்டு சந்தேகநபர்கள் கடந்த 14ஆம் திகதி கடுவெல நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருந்தனர். இவர்களில் ஒருவர் போதிய சாட்சியம் இல்லாததன் காரணமாக நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டிருந்தார். எனினும், தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேகநபரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு கடுவெல நீதிமன்ற நீதிபதி பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தக் கொலைச் சம்பத்தினை மேற்கொண்டதாகச் சந்தேகிக்கப்படும் சந்தேகநபர்களின் தொலைபேசிக்கு வந்த அழைப்புக்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிசார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# சொந்தஇடங்களில் மீளக்குடியமர்வை வலியுறுத்தி யாழ்.இல் தொடர் போராட்டங்களுக்கு ஏற்பாடு

## அனைத்து பொதுஅமைப்புக்களும்ஆதரவு

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசமும், வலி வடக்கு பிரதேச பொதுஅமைப்புக் களின் ஒன்றியமும் இணைந்து இடம் பெயர்ந்தோர் தமது பிரதேசங் களுக்குத்திரும்புவதற்கான கோரிக் கையை முன்வைத்து தொடர் போராட்டங்களை முன்னெடுப்ப தெனத் தீர்மானித்துள்ளன.

இடம்பெயர்ந்தவர்களது பிரதேசங் களில் இருந்து சிறிலங்காப்படைகள் வெளியேற மறுத்துள்ளமையானது இயல்பு வாழ்க்கைக்கு திரும்புதல் என்ற போர்நிறுத்த உடன்படிக் கையின் சரத்தை மீறுவதாகவும், மனித உரிமைகளையும், இயற்கை நீதியை மீறுவதாகவும் அமைந்துள்ள மையால் இடம்பெயர்ந்த மக்களின் பொறுமை எல்லை கடந்து விட்ட நிலையிலேயே தொடர்போராட் டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என இது தொடர்பாக வெளியிடப் பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இம்மக்களது கடந்தகாலப் போராட்டங்களுக்குச் செவிமடுக்க சிறிலங்கா அரசாங்கமும், படைத் தரப்பும்மறுத்துள்ளமை இடம்பெயர்ந்த மக்களது வாழ்க்கையை இருப்பை கேள்விக் குறியாக்கிவிட்டது.

இத் தொடர் போராட்டங்களுக்கு யாழ். மாவட்டத்தில்உள்ள அனைத்து மக்கள் அமைப்புக்களும் முழு மையாக ஒத்துழைப்பு நல்க முன்வந் துள்ளமை குறிப்பிடத்தக்கது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் – முஸ்லிம் மக்களிடையே வன்முறையை தூண்ட முயற்சி

### விழிப்புடனிருக்க எழிலன் வேண்டுகோள்

(திருமலை)

தமிழ்-முஸ்லிம் மக்களிடையே வன்முறையைத்தூண்டிவிட முயற்சிக் கப்படுகிறது. இது குறித்து விழிப்புடன் இருக்குமாறு திருமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி. எழிலன் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருகோணமலை மூதூர் நகரில் செவ்வாய்க்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர்,விடுதலைப்புலிகளின் உறுப்பினர் அல்ல என்று திருமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் விளக்கமளித்துள்ளார்.

இது குறித்துப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் எழிலன் விவரித்துள்ளார்.சாதாரண வாழ்வு வாழ்ந்த அந்த இளைஞர் நேற்று முன்தினம் முஸ்லிம்களின் பகுதிக்குள் சுட்டுக்கொல்லப்பட்டார். இதன் மூலம் தமிழ்-முஸ்லிம்மக்களிடையே வன்முறையைத் தூண்டி விடும் நாசகரத் திட்டத்தின் படியே இக்கொலை நடத்தப்பட்டதாகவும்,கொல்லப்பட்டவர் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் என்று பரப்புரை செய்யப்பட்டு வருவதுஉண்மைக்குப் புறம்பானது எனவும் கண்காணிப்புக்குழுவிடம் சி.எழிலன் கூறினார்.

மேலும் இது தொடர்பாக விழிப்பாக இருக்குமாறு மூதூர் பிரதேச முஸ்லிம்களுக்கு அவர் வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளார்.

## முச்சக்கரவண்டி-கன்ரர் மோதின புத்தூர்சந்தியில் நால்வர் படுகாயம்!

(தென்மராட்சி)

மீசாலை புத்தூர்சந்தியில் நேற்று மதியம் முச்சக்கரவண்டியும் கன்ரரும் நேருக்குநேர் மோதி விபத்துக் குள்ளானதில் இரண்டு பெண்கள் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

பிரதான சாலையில் வந்து கொண்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்றும், கன்ரரும் நேர் எதிராக மோதியதில் இரு வாகனங்களும் கடும் சேதத்திற்கு உள்ளானதுடன் முச்சக்கரவண்டியில் பயணம் செய்த வரணி இயற்றாலையைச் சேர்ந்த ஆழ்வார்பிள்ளை தங்கராசா(வயது-38) கந்தசாமி சுகிதா (வயது-27) ராஜா தியாபரன் (வயது-22) தங்கராசா பத்மகலா(வயது-30) ஆகியோர் படுகாயத்திற்குள்ளாகி சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு மேலதிகசிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (28)

### எதிர்க்கட்சி...

அரசாங்கத்தை விட்டு வெளியேறியுள்ள ஜே.வி.பி. எம்.பி.க்கள் பாராளு மன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமரவிருப்பதனால் எதிர்க்கட்சி உறுப் பினர்களின் தொகை 142 ஆக அதிகரித்துள்ளது. இதனால் அரசாங்கம் பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை இழந்துள்ளளது. அந்த வகையில் பாராளுமன்றம் கூடியபோது எதிர்க்கட்சி ஆசனங்களில் ஜே.வி.பி. உறுப் பினர்கள் அமர்வதாக அறிவித்தனர்.ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து தாம் விலகியமைக்கான காரணத்தினை ஜே.வி.பி பாராளுமன்றக் குழுத்தலைவர் விமல்வீரவன்ச சபையில் விளக்கியுள்ளார்.

### திருமலையில்...

வேட்டுக்களை தீர்த்து கலவரத் தினைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து பொலிசார் அப்பகுதியில் தீவிர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வரு வதுடன் ஊரடங்குஉத்தர வினையும் பிறப்பித்துள்ளனர்.

இதேவேளை தெகிவத்தை, சோமபுர பகுதிகளைச் சேர்ந்த 200 இற்கு மேற்பட்ட சிங்கள மக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப் பாட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

இவற்றினால் அச்சம் கொண்ட குமரபுரம், தங்கபுரம், அரிப்பு 58ஆவது கொலனி, 6ஆம் கொலனி, பெரு வெளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி கிளி வெட்டிப் பாடசாலையிலும், அண்மித்த ஆல யங்கள் மற்றும் தேவாலயங்கள் என்பவற்றில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

### பொதுக்கட்டமைப்பில்...

மைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டால் மத்திய அரசாங்கத்தினதும் மாகாண சபைகளிலும் ஆளும்கட்சியின் பலத்தை இழக்கசெய்வது தொடர்பில் தாம் நடவடிக்கை எடுக்கவேண்டிவரும் எனவும் தெரிவித்துள்ளார். எனினும் சனாதிபதியின் எதிர்கால நடவடிக்கைகளை பொறுத்து தமக்கு திருப்தி ஏற்படின் மீண்டும் இணைந்து செயலாற்றுவதற்கும் சாத்தியம் உள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை அமைப்பதிலும், அதனை செயற்படுத்துவதிலும் பங்களிப்புச் செய்த அமைச்சர்களான மங்கள சமரவீர, அனுராபண்டாரநாயக்க, லக்ஷ்மன் கதிர்காமர், நிமால்சிறிபாலடிசில்வா ஆகியோருக்கு நன்றி தெரிவித்த விமல் வீரவன்ச பாராளுமன்ற நடவடிக்கைகளின்போது தமது கட்சிக்களித்த ஒத்துழைப்புகளுக்கு பிரதமர் மகிந்தராஜபக்ஷவுக்கும் ஆளும் கட்சி அமைப்பாளர் ஜெயராஜ் பெனாண்டோபுள்ளேக்கும் தமது விசேட நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.

## -ஹெல்கேசனைச் சந்தித்துத்திரும்பிய-

# யாழ்.மீனவசங்கப்பிரதிநிதிகள் முகமாலையில் தடுத்து விசாரணை

(வடமராட்சி)

கிளிநொச்சிக்கான விஜயத்தை நேற்று மேற்கொண்டிருந்த நோர்வே பிரதிஅமைச்சர் ஹெல்கேசனை சந்தித்துத்திரும்பிய யாழ்.மாவட்ட மீனவசங்கப் பிரதிநிதிகள் முக மாலை இராணுவச்சோதனைச் சாவடியில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளிற்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர்.

சுமார் ஒருமணி நேரத்திற்கு மேலாக இவ்வாறு தடுத்து வைக் கப்பட்டு விசாரணைகளிற்கு உள்ளாக் கப்பட்ட மீனவ சங்கப் பிரதிநிதிகள் எடுத்துச்சென்ற ஆவணங்களையும் படையினர் சுவீகரித்துள்ளனர்.

அரசு புலிகளுக்கிடையேயான சுனாமி பொதுக் கட்டமைப் பினை உடனடியாக கைச்சாத்திட வலியுறுத்தியும், சமாதான நடவடிக் கைகளை மீள ஆரம்பிக்க வலியுறுத தியும் கடந்த திங்கள் மீனவசமூகம் வடமராட்சிபகுதியில் கண்டனப் பேரணியொன்றை நடத்தியிருந்தது.

இப்பேரணியின் முடிவில் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் களை ஐ.நா செயலாளர் ஐரோப் பிய ஆணைக்குழு மற்றும் நோர்வேத் தரப்புகளிடம் கையளிக்க மீனவ சமூகம் முடிவு செய்திருந்தது.

இந் நிலையில் நேற்றைய தினம் விடுதலைப்புலிகள் அரசியல் துறையினருடனான பேச்சுக்களிற் காக கிளிநொச்சிக்கு வருகை தந்திருந்த நோர்வே பிரதி அமைச் சரை மீனவசங்கப் பிரதிநிதிகள் சமாதான செயலகத்தில் சந்தித் தனர். அவ்வேளையில் தமது கோரிக் கைகள் அடங்கிய மகஜர்களையும் அங்கு கையளித்திருந்தனர். (27)

# பஞ்சவிதிக்கொள்கைகளை இன்று வெளியிட ஜாதிகஹெலஉறுமய முடிவு

(கொழும்பு)

சிறிலங்காவின் நலனுக்காக தாய் நாடு சம்பந்தமான ஐந்து முக்கிய விடயங்களை முன்வைத்து பஞ்ச விதிக்கொள்கைகளை இன்று வெளியிடவுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமய தேசப் பற்றுள்ள இயக்கம் மற்றும் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் ஒன்றி ணைந்து தாய்நாடு சம்பந்தமான ஐந்து முக்கிய விடயங்களை முன் வைத்து பஞ்சவிதிக் கொள்கைகளை இன்று வெளியிடவுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்னதேரர் தெரிவித்துள்ளார்.

திம்பிரிகஸ்யாய இஸிபத்தனா ராமயவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த பஞ்சவிதிக்கொள்கை களுக்கு ஏற்ற ஒரு தலைவர் இன் றைய தினம் நியமிக்கப்படுவார் என்றும், சிலவேளை சனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டால் அந்தத் தலைவர் தங்களின் சார்பில் சனா திபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார் எனவும் தெரிவித்த அத்துரலிய ரத்ன தேரர்அந்தத்தலைவர் ஜாதிக ஹெல உறுமய கட்சியைத் தவிர்ந்த வேறு ஒரு கட்சியைச் சேர்ந்தவராக இருக்க பெருமளவு இடமிருப் பதாகவும் கூறினார்.

தற்போது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் சக்தி அதிகரித் திருப்பதனால் முன்னரைப் போன்று தனித்துப் போராட வேண்டியிராது என்று சுட்டிக்காட்டிய ரத்ன தேரர் பாராளுமன்றத்தில் ஜே.வி.பி யினருடன் இணைந்து பணி யாற்றுவது குறித்து ஜாதிக ஹெல உறுமய கவனம் செலுத்தி வருவ தாகவும் தெரிவித்தார்.

## நேற்றும் அடையாள உண்ணாவிரதம்

(திருமலை)

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை, கடற்கோள் புனர் நிர்மாணப் பொதுக்கட்டமைப்பை உடனடியாக நடைமுறைப்படுத்து மாறு அரசைவலியுறுத்திக் கோரு வதற்காக நடத்திவந்த அடையாள உண்ணாவிரத இயக்கம் திரு கோணமலையில் நேற்று புதன்கிழ மையுடன் முடிவுக்கு வந்தது.

உப்புவெளி மூன்றாம்கட்டைச் சந்தி யில் மூன்றாவது தினமாக நேற்று புதன்கிழமை ஒருநாள் உண்ணா விரதம் நடத்தப்பட்டது. (25)

### சிறுபான்மை...

இந்த அறிக்கையில் சிறிலங்கா பொலிசாரின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் நபர்கள் தொடர்ந்தும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுவதாகத் தெரிவித் துள்ளது.இதுதவிர, சிறுபான்மை யினத்தைச் சேர்ந்தவர்களுக்கெதிரான எதிர்நடவடிக்கைகளும் அதிகரித்து வருவதாக அறிக்கையில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (32)

### பொதுக்கட்டமைப்பு..

றேன் இது இருதரப்புகளிடையே நம்பிக்கையை ஏற்படுத்தும்.

போர்நிறுத்த மீறல்கள் தொடர்பாக கருத்திலெடுத்துள்ளோம் கடந்த வாரம் இது பற்றிக் கலந்துரையாடியுள்ளோம். போர்நிறுத்தமீறல்கள் தொடர்பாக உயர் மட்டக்கருத்துக்கள் பெறப்பட் டுள்ளன என்றார்.

### பொலிஸ்...

சிறிலங்கா பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ரணசீல கங்கா ராமகே என்பவர் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய் தனர். இதன்போது அவர் படுகாய மடைந்துள்ளார்.

காயமடைந்த இவர் தற்போது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (32)

# முல்லையில் படகுக்கட்டுமானத்தளம் வைபவரீதியாக திறந்துவைப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சுனாமிக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திசேவைத்திட்டத்திற்கமைய நேற்றையதினம் முல்லை நகரில் படகுக் கட்டுமானத்தளம் திறந்துவைக்கப்பட்டதுடன் இயந்திர மீன்பிடிப் படகுகளும் மீன்பிடி உபகரணங்களும் கையளிக்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தலைவர் சிவனடியார் தலைமையில் நேற்று பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஆரம்பநிகழ்வாக ஈகச்சுடரினைப் பங்குத்தந்தை திருமகன், கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ரங்கன் ஆகியோர் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றிவைத்தார். தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை டாக்டர் என்.எஸ்.மூர்த்தி ஏற்றிவைக்க கட்டுமானத்தளத்திற்கான பெயர்ப்பலகையினை அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்கள் திரைநீக்கம் செய்துவைத்தார். கட்டுமானத்தளக் காரியாலயத்தினை எம்.எம்.எஸ்.நிறுவன பிரதிநிதி திறந்துவைத்தார். மீன்பிடி இயந்திரப் படகுகளையும், மீன்பிடி உபகரணங்களையும் பெல்ஜியம் மெல்பேக் பட்மின்டன் கழக அங்கத்தவர் குதசம் வழங்கிவைத்தார். கடற்றொழில் சமாசத் தலைவர், அங்கத்தவர்கள் பொதுமக்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(சோ,20,ஆ)

# தகவல் தரவும்



ஆண்டு 3 இல் கல்விகற்கும் நவரட்ண ராஜா சுஜீவா (வயது-8) என்பவர் நேற்று மாலை 3.30 மணிக்கு தனியார் கல்வி நிலை யத்திற்கு கல்விகற்கச் சென்றவர் வீடு திரும்ப வில்லை.

இவர் சிவப்பு நிறத்தில் வெள்ளைக் கோடிட்ட சட்டையும் கறுப்பு நிறப்பாவாடையும் அணிந்திருந்தார்.

இவர் குறித்த தகவல்தெரிந்தவர்கள் கிளி நொச்சி காவல்பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
க.இலக்கணகுமார்,
(மாமன்)
புகையிரதவீதி,
கிளிநொச்சி.

நவரட்ணராஜா (பபி)
(தந்தை),
பாய்க்கடை,
கிளிநொச்சி பொதுச்சந்தை.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது